Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 32 • 28.02.2016

நாளாந்த செய்திகளை உடனுக்குடன் அறிந்திட

www.deepam.lk



யேசுவும் கனவில் வந்தார்...

## இறந்தவர்களிற்கும் உயிர்கொடுக்கிறேன் 'மிரட்டும்' பூசாரி

# ஆபாச ஆடையணிகிறார்களா யாழ் பல்கலைகழக மாணவிகள்?

# ஒரேயொரு தண்டனையாவது கொடுங்கள்

வவுனியாவில் பாடசாலை மாணவி ஹரிஸ்ணவி துஷ்பிரயோகத்தின் பின்னர் கொல்லப்பட்டுள்ளார். கொலையின் பின்னர் அவர் தூக்கில் தொங்க விடப்பட்டுள்ளார். நினைக்கவே மனம் நடுங்கும் பாதகத்தை வெகு சாதாரணமாக புரிந்து விட்டு, கொலையாளி/யாளிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

மனிதகுலமே வெட்கித் தலைகுனியும் விதத்தில் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் நாட்டில் தலைவிரித்துள்ளன. அரசுகளும், சட்டங்களும் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் குறைந்தபாடில்லை. கொடூரமாக கொல்லப்பட்ட பெண்களின் பெயர்கள் கிரமமான கால ஒழுங்கில் பதியப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. நம்மத்தியில் ஊடகங்களின் வரவின் பின்னர் அதிகமும் பேசப்பட்ட கொலை கோகிலாம்பாள் கொலை. அதன் பின்னர் எத்தனை கோகிலாம்பாக்கள், கிருசாந்திகள், வித்தியாக்கள்ஞ் இப்பொழுது ஹரிஸ்ணவியில் வந்து நிற்கிறது.

பெண்களை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்யும் காட்டுமிராண்டித்தனத்தின் உச்சத்தை பல வருடங்களின் பின்னர் இப்பொழுதுதான் மீண்டும் காண ஆரம்பித்துள்ளோம். இந்தவகையான போக்குக்கள் தமிழ் சமூகத்தில் சில பத்து வருடங்கள் இல்லாமலிருந்தது. அண்மைய சில வருடங்களில் மோசமாக விஸ்பரூபம் எடுத்துள்ளது.

வடக்கில் யர்சிகா, வித்தியா தெற்கில் சேயா என கடந்த சில மாதங்களிலேயே துஷ்பிரயோக கொலை பட்டியல் நீள்கிறது. இன்னும் கொன்சலிற்றா போன்றவர்களின் மரணத்தின் பின்னான குற்றச்சாட்டுக்கள் இன்னுமிருக்கிறது. ஆபாச தாக்குதல், சேஷ்டை, பாலியல் இலஞ்சம் என சமூகத்தில் ஏதோ விதத்தில் பெண்களின் பெரும்பாலானவர்கள் குறிப்பாக இளவயதினர் அச்சுறுத்தலைதான் எதிர்கொண்டபடியிருக்கின்றனர். யாழ்குடாநாடு உள்ளிட்ட வடக்கு பகுதியிலுள்ள எல்லா பிரதான நகரங்களிலும் தனிமையில் திரிவதற்கு பெண்கள் அச்சப்படும் சூழல்தான் நீடிக்கிறது. ஆபாசவசைகள், ஆபாச வர்ணனைகள் என பெண்கள் தொல்லைப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

மாணவி வித்தியாவின் கொலை நமது சமூகத்தில் என்னவிதமான கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எல்லோரும் கொதித்தார்கள். கணிசமானவர்கள் வீதிக்கிறங்கினார்கள். ஆனால் அன்றுடன் வித்தியாக்களின் துயரம் முடிந்ததா? வித்தியாக்களிற்காக போராடி, எல்லா நகரங்களையும் ஸ்தம்பிக்க வைத்த ஆண்கள்தானே ஹரிஸ்ணவிக்களையும் கொல்கிறார்கள். என்ன மாதிரியான முரண் இது?

வித்தியா கொல்லப்பட்ட பின்னர் குடாநாடே தீப்பற்றி எரிந்தது. உண்மையில் அன்று அப்படியொரு எழுச்சி இயல்பாக நிகழ்ந்திருப்பின், யாழ் நகரத்தின் முட்டுச்சந்துகள், குறுக்குவீதிகளால் இன்று பெண்கள் தயக்கமின்றி நடந்து சென்றிருக்க வேண்டும் அல்லவா? வித்தியாவின் மரணத்தின் முன்னர் இருந்த அதே தெருப்பொறுக்கிகள் இன்றும் அந்தந்த இடங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள். படிக்கவும், வேலைபார்க்கவும், இன்னும் என்னென்னவோ அலுவல்களிற்கும் செல்லும் பெண்கள் அதே ஆபாசத்தாக்குதல்களை சந்திக்கிறார்கள்.

பெண்கள் தொடர்பான நமது ஆண்களின் மாற்ற முடியாத ஆழ்மன உணர்வுகளை இந்த சம்பவங்கள் வெளிச்சமிடுகின்றன. கொந்தளிப்புக்களும், போராட்டக்களும் ஒரு பொழுதுபோக்கு அல்லது சாகச உணர்வின் உந்துதல் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

உயர்கல்வி, வேலைவாய்ப்பு போன்ற காரணங்களினால் சமூகத்தின் சிறுபிரிவினரிடம் மாத்திரமே இயல்பான ஆண்பெண் உறவாடல் நிகழ்கிறது. பெரும்பாலும் இதிகாச 'இராவணனின்' வழித்தோன்றலைப் போலத்தான் நடந்து கொள்கிறார்கள்.

இந்த துயரத்திற்கு முடிவேயில்லையா?

இதற்கு விடை கண்டுபிடிப்பதற்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகம், துஷ்பிரயோகத்தின் பின் கொலை போன்ற மோசமான குற்றங்கள் கடந்த ஐந்தாண்டில் எத்தனை நிகழ்ந்தது? குற்றங்களிற்கு காரணமான எத்தனை பேர் அடையாளம் காணப்பட்டனர்? எத்தனைபேர் தண்டிக்கப்பட்டனர்? என்ற கேள்விகளிற்கு விடை கண்டறிய வேண்டும்.

இந்த கேள்விகளிற்கான விடையே அனைத்திற்கும் விடையாகும். காவல்த்துறையும், சட்டத்துறையும் இந்தவகையான குற்றங்களிற்கு காரணமானவர்கள் மீது ஈவுஇரக்கமே காட்டக்கூடாது. பாலியல் குற்றவாளிகள் 'ஊசி நூல் லொஜிக்' பேசி தப்பிக்கும் எந்த வாய்ப்பையும் அவை வழங்கக்கூடாது.

பாலியல்கொடுமையின் பின் கொல்லப்பட்ட எத்தனையோ வழக்குகள் நீதிக்காக காத்திருக்கின்றன. இப்பொழுது அவசியமாக தேவைப்படுவது இந்தவகையான குற்றவாளிகள் தப்பிக்க முடியாதென்ற செய்தியை கூறும் ஒரேயொரு தண்டனைதான்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்




**சி.வி. விக்கினேஸ்வரன் (முதலமைச்சர்)**

அரசியலானது எங்களை பிரித்து என்ன குறிக்கோளுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறக்க வைத்திருக்கிறது. எங்களுடைய தனித்துவமான அரசியல் கட்சி ரீதியான ஏதோ எண்ணங்கள் எம்மை பிரித்து வைத்திருக்கிறது நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் நோக்கம் வடமாகாணத்தை விருத்தி செய்வது என்று இருக்கும் போது அதற்கு இடமளிக்காது கட்சி ரீதியிலான பிரச்சினைகளில் ஈடுபடுவதால் எங்களுக்கிடையே பலவிதமான முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.



**மைத்திரிபால சிறிசேன (ஜனாதிபதி)**

நாட்டின் ஏனைய ஜனாதிபதிகளை விடவும் மிகவும் கஷ்டமான காரியத்தை நான் செய்து கொண்டிருக்கின்றேன். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாமல் அரசியலமைப்பு திருத்தம் செய்த முதலாவது நாடாக இலங்கையின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆட்சியாளர் தனக்கு கிடைக்கப் பெற்ற அதிகாரம் எந்த சந்தர்ப்பத்திலும் தன்னைவிட்டு விலகும் என்பதனை மனதில் நிறுத்தி செயற்பட வேண்டும். ஆட்சி அதிகாரங்களை முழுமையாக மக்களின் நலனுக்காக பிரயோகிக்க வேண்டும்



**ரஞ்சன் ராமநாயக்க (பிரதிஅமைச்சர்)**

மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இடையில் ஒப்பந்தங்கள் இருப்பதால், ராஜபக்சவினரை கைது செய்யப் போவதில்லை யோஷித்த ராஜபக்சவின் கைதுடன் அது பொய்ப்பிக்கப்பட்டுள்ளது. சுரக்காய் மீது வைத்த கை பூசணிக்காய் மீது வைக்கப்படும் என்ற கிராமத்து கதை ஒன்று உள்ளது. தற்போது பூசணிக்காய் மீது கை வைக்கப்பட்டுள்ளதால், சுரக்காய் மீதும் வைக்கப்படும். தமது ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட ஊழல், மோசாடிகள் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோர், சிறைச்சாலை செல்ல வேண்டியுள்ளது.



**மங்கள சமரவீர (அமைச்சர்)**

நாட்டில் இடம்பெற்ற போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பை நிராகரிக்கவில்லை. இதற்காக ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய நீதிமன்றம் மூலம் நியாயமான மற்றும் நம்பகத்தன்மையான பதில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பை ஆராய இலங்கை தயார்.



**பாட்டலி ரம்பிக்க ரணவக்க (அமைச்சர்)**

பல்வேறு சுலோகங்களை முன்னிறுத்தி போராட்டங்கள் மற்றும் பேரணிகளில் ஈடுபடுபவர்கள் கொழும்பு நகாஜீன் மற்றும் நாட்டின் அபிவிருத்தியை பின்னால் இட்டுச் செல்ல காரணமாகின்றனர்.



**பீற்றர் டட்டன் (குடிவரவுத்துறை அமைச்சர்)**

இலங்கை அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவில் அடைக்களம் இல்லை. கடந்த வாரம் இலங்கை அகதிகள் படகு ஒன்று அவுஸ்திரேலியாவிற்குச் சென்றுள்ளது. இதன் போது அந்தப் படகு மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவில் அடைக்களம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# க்ளிக் பக்கம்



இயற்கை வடித்த ஓவியம்.
இலைகள் உதிர்ந்தாலும்,
என் உயிர் பிரியும் தருணம்
வரை ஏதோ ஒரு வகையில்
உதவும் என்னை வெட்டி
வீழ்த்தி
அழிப்பது ஏன் மனிதா?

என்னைப்பற்றி: நான் கணேசநாதன் விசாளினி. தற்போது யாழ்ப்பாணத்தில் உயர்தரம் கணிதம் கற்று வருகிறேன். புகைப்படங்கள் எடுப்பது என் பொழுதுபோக்கு.



படப்பிடிப்பாளர்:
க.விசாளினி

இடம்:
மன்னார்

குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk






## நம்மூர் நாயகர்கள்

சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழகத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களை கொண்ட 4 குடும்பங்களுக்கு 53800/ பெறுமதியான 4 துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளார் நோர்வே கணபதி துர்க்கை ஆலயம் விருபாஷ்சி நித்தியானந்த சர்மா .

Home



**www.facebook.com**
பாதுகாப்பாக இருக்க வேண்டிய நீயே உன் பக்கத்துவீட்டு பெண்ணை வக்கிரம் கொண்டு தீர்க்கும் போது வேலிக்கு வேலி போலீஸ் காவலா போடமுடியும் அறிவாளிகளே ....
இதுக்கு நல்லாட்சிக்கும் என்னடா சம்மந்தம் ...
நீங்க செய்யும் கழிசடை வேலைக்கு எதுக்கடா சிங்களவன் போல கொண்டுபோய் பழியை போட்டு தப்பித்துக்கொண்டு இருக்கிறீங்க .
முதலில் உங்களை நீங்களே தூப்பிக்கொளுங்க எடுத்ததுக்கு எல்லாம் சிங்களவன் தூ .



**www.facebook.com/vanathan**
தமது அரசியல் லாபத்துக்கும் பரபரப்புக்கும் காலம் பூரா நமது ஈழத்து மக்களை ராணுவத்தின் பிடியில் வைத்திருக்கவே இப்படியானவர்கள் விரும்புகிறார்கள் .
பிரபாகரன் உயிரோடு உள்ளார்! மீண்டும் ஈழப்போர் தொடங்கும்! பழ.நெடுமாறன்.



**www.facebook.com/Venthan**
இருந்தால் தலைவன்,
இல்லாதுவிடின் இறைவன்.....
இதை விட என்ன சொல்ல...



**www.facebook.com/ooviyanuyir**
தனிமை தனித்திருக்க விடாமல் தொந்தரவு செய்கிறது.



**www.facebook.com/ Dr.M.K.Muruganandan**
குண்டானவர்கள் கவனத்திற்கு
A clinical meeting was held yesterday on 20.02.2016 at the institute of Family medicine
இந்தக் கருத்தரங்கில் பேசிய டாக்டர் அரவிந்தன் இலங்கையில் சீனி மற்றும் உப்பை அதிகமாக உபயோகிப்பதில் இனரீதியாக
முதலாவது இடத்தில் இலங்கை தமிழர்களும்
2ம் இடத்தில் இஸ்லாமியர்கள்
3ம் இடத்தில் சிங்களவர்களும்
4ம் இடத்தில் மலையகத் தமிழர்களும்
இருப்பதாக தெரிவித்தார்.
இதன் பலனாக நீரிழிவின் பாதிப்பும் இதே நிரைவரிசையில் பாதிப்பதாக தெரிவித்தார்.
இவர் தெரிவித்த மற்றொரு கருத்து obesisty பாதிப்பு உள்ளவர்கள் தமது எடையில் 10% குறைத்தால்
பிரஸர் 10 mm ஆல் குறையும்
நீரழிவாளர்களின் fasting blood sugar 50%குறையும்
நீரிழிவு தொடர்பான மரணங்கள் 30% ல் குறையும்
கொலஸ்டரோல் 10% ல் குறையும்.
இப்பொழுதே எடை குறைப்பில் இறங்குங்களேன்.

Like Comment Share





அமெரிக்காவில் ஆஷ்லி என்ற இளம்பெண்ணிற்கு தொடர்ந்து பலரும் காதல் தொந்தரவு செய்துள்ளனர். அதில் ஒன்று வித்தியாசமானது. அவர் பயணிக்கம் வீதியிர' 'ஆஷ்லி என்னை திருமணம் செய்வாயா' என தினமும் வண்ணவண்ண எழுத்தில் எழுதப்பட்டிருக்கும். ஆஷ்லி பொலிசாருக்கு புகார் கொடுத்த பின்னர்தான் தெரியும், அதை எழுதியதே ஒரு பொலிஸ்காரர் என்று. இப்பொழுது ஆஷ்லி, மிஸிஸ் பொலிஸ்காரி!




பிறப்பிலேயே முள்ளந்தண்டு வளைந்திருந்த மாணவன் ஒருவனை சத்திரசிகிச்சை மூலம் சாதாரணநிலைக்கு கொண்டுவந்து சாதித்துள்ளனர் இலங்கை வைத்தியர்கள். காலி கரம்பிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர்களே இந்த சத்திரசிகிச்சையை செய்துள்ளனர். பிறப்பிலேயே முள்ளந்தண்டு வளைவுடன் பிறந்து, நடக்க சிரமப்பட்டு கொண்டிருந்த 17 வயது மாணவனே சத்திரசிகிச்சைக்குட்பட்டவர். அவரது எலும்புக்கூடு பிரிக்கப்பட்டு வளைந்த முதுகுஎலும்பு அகற்றப்பட்டு, இரண்டு உலோகத்தகடு பொருத்தப்பட்டுள்ளது. தற்போது விசேட மருத்துவஉடையுடன் ஓரளவு சாதாரணமாக நடக்க ஆரம்பித்துள்ளார் மாணவன்

## இணையய யன்னல்


பீடாதிபதி அலுவலகம்
கலைப்பீடம்
2016.02.17

சேலை கட்டுப்பாட்டு அறிவித்தல்


பீடாதிபதி அலுவலகம்
கலைப்பீடம்
2016.02.26

அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும்
கல்வி அலகுகளின் இணைப்பாளர்கள்.

வாபஸ் வாங்கிய அறிவித்தல்



# ஆபாச ஆடையணிகிறார்களா யாழ் பல்கலைகழக மாணவிகள்?

தீபம் குழு

சமூக வலைத்தளங்கள் மொத்தமுமாக சேர்ந்து கும்மியெடுத்துக் கொண்டிருக்கிறது யாழ்ப்பாண பல்கலைகழகத்தை. தமிழர்களின் பல்வேறு எழுச்சிகளிலும், கருத்துருவாக்கத்திலும் பங்காளியாக இருந்த யாழ்ப்பாண பல்கலைகழகம் பிற்போக்கான கட்டுப்பாடொன்றை விதித்திருக்கிறதென்பதே இணையத்தளங்கள், சமூகவலைத்தளங்களின் கொதிப்பு.

யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் கலைப் பீடாதிபதி ஞானக்குமரனால் கையெழுத்திடப்பட்டு வெளியிடப்பட்டதாக கூறப்படும் அறிக்கையொன்று சில நாட்களின் முன்னர் வெளியானது. இதில் பல்கலைகழகத்திற்கு வருபவர்களிற்கான ஆடைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் டெனிம் ஜீன்ஸ், ரீசேட் அணியக்கூடாது, தாடி வைத்திருக்க கூடாது என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அது அவ்வளவாக சர்ச்சையை கிளப்பவில்லை. சர்ச்சையை கிளப்பியது, பெண்களின் ஆடைக்கட்டுப்பாடுதான்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாணவிகள் சேலையுடுத்தித்தான் வர வேண்டுமென கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக பரவலாக கண்டனங்கள் எழத் தொடங்கியுள்ளன. சமூக வலைத்தளங்களின் கட்டற்ற சுதந்திரம் பலரையும் துணிந்து பேச வைத்துள்ளது. பல்லைகழக மாணவிகள் பலரே 'இது ஒரு பிற்போக்கானஞ் ஆணாதிக்க கட்டுப்பாடு' என துணிந்து கருத்துக்கள் சொல்லி வருகிறார்கள்.

ஆனால் மெய்நிகர் உலகம் வேறானது. ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு நடவடிக்கையும் கண்காணிக்கப்படும். விளைவுகளை ஏற்படுத்தும். விரிவுரையாளர்களின் 'விருப்பத்திற்கு' மாறாக நடந்தாலே பல்கலைகழக மாணவ, மாணவிகள் பழிவாங்கப்படுவார்கள் என்ற பரவலான அபிப்பிராயம் உள்ள நிலையில், பல்லைகழகத்தின் இந்த புதிய கட்டுப்பாட்டிற்கு எதிராக பத்திரிகைகளில் கருத்து சொல்ல மாணவிகள் தயங்கினார்கள். பல்கலைழக சுற்றுவட்டத்தில் நாம் பேசிய மாணவிகள் எல்லோருமே சொல்லி வைத்ததை போல பேசினார்கள், சொல்லி வைத்ததை போல பயந்தார்கள்.

கலைப்பீடாதிபதி ஞானக்குமரனின் கையெழுத்துடன் விளம்பரபலகையில் இந்த ஆடைக்கட்டுப்பாட்டு குறிப்பு ஒட்டப்பட்டிருந்தது. கலைப்பீட மாணவர்களிற்கு கண்டிப்பான உத்தரவாகவும், ஏனைய பீட மாணவர்கள் அதை பின்பற்றுமாறும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த உத்தரவை பின்பற்றாதவர்கள் வகுப்புக்களிற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

பொதுவாகவே பெண்களின் ஆடைகள் தொடர்பாக கட்டுப்பாடுகள் விதிக்கும் சிந்தனைபோக்கு ஆரோக்கியமானதல்ல. தமிழ் காலாசாரம் என்ற பெயரில் உருவான பெண்களின் ஆடைகள் பெரும்பாலும் ஆணாதிக்க மனநிலை சார்ந்தவை என்ற வாதம் வலுவடைந்து வரும் சூழல் இது. நாகரிகமாற்றம், வாழ்க்கைமுறை மாற்றம் என பெண்களின் உலகம் சடுதியான மாற்றம் கண்டுவிட்ட பின்னரும் இப்படியான கட்டுப்பாடுகளை விதிப்பதுதடித்த ஆணாதிக்க மனநிலையன்றி வேறில்லையென பலரும் கொதிக்கிறார்கள்.

இணைய ஊடகங்கள், சமூகவலைத் தளங்களில் இந்த கட்டுப்பாட்டிற்கு முழுமையான எதிர்ப்பு இருந்தது. எனினும், பல்கலைகழகத்திற்குள் இதற்குள் சிறியளவிலான ஆதரவுஉள்ளது. சில மாணவர்களும், விரிவுரையாளர்களும் ஆடைக்கட்டுப்பாட்டை ஆதரிப்பதாக கூறுகிறார்கள். குறிப்பாக விரிவுரையாளர்களும், மாணவர் சங்கங்களும். அவர்களை பகிரங்கமாக எதிர்த்து பல்கலை கழக வாழ்வை தொடர முடியாதென பலரும் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பேசியதிலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது. நாகரிகமென்ற பெயரில் பெண்கள்

**பெண்களின் ஆடைகள் பெரும்பாலும் ஆணாதிக்க என்ற வாதம் வலுவடைந்து வரும் சூழல் இது. நாகரிகமாற்றம், வாழ்க்கைமுறை மாற்றம் என பெண்களின் உலகம் சடுதியான மாற்றம் கண்டுவிட்ட பின்னரும் இப்படி யான கட்டுப்பாடுகளை விதிப்பதுதடித்த ஆணாதிக்க மனநிலையன்றி வேறில்லை யென பலரும் கொதிக்கிறார்கள்**




**சரோஜா சிவச்சந்திரன்**
மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர்

கலாசாரத்துக்குள் போகாமல் எம்மை அடையாளப் படுத்துவதற்காக சில உடைகளை அணியலாம். பெரதெனிய பல்கலைகழகம் உள்ளிட்ட சிலவற்றில் பெண்கள் சேலையணிய வேண்மென்ற நடைமுறை உள்ளது. யாழ்ப்பாண பல்கலைகழகமும் பொதுவான நடைமுறை ஒன்றை வைத்திருந்திருக்கலாம். விரும்பிய உடை அணியலாமென்றால், எது விரும்பிய உடை என்ற கேள்வி எழும். ஒவ்வொருவரும் பொருத்தமான ஆடையைதான் பல்கலைகழகத்திற்கு அணிவார்கள். மாணவர்களிற்கு தெரியும் எதை பல்கலைகழகத்திற்குள் அணியலாம். எதை அணியக்கூடாதென.

திணிப்பு இல்லாமல் மாணவர்கள் தாங்களாகவே தீர்மானித்து முடிவு செய்ய வேண்டும். இது எங்கள் பல்கலைகழகம், இதை எப்படி வைத்திருக்க வேண்டுமென்ற உணர்வு மாணவர்களிடமிருந்தே வர வேண்டும்.





## பேராசிரியர் அ.ராமசாமி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்
www.facebook.com/ramasamy

### ஆச்சரியம் அதிர்ச்சி; கண்டிக்கத்தக்கது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விடப்பட்டுள்ள சுற்றறிக்கையைக் கவி சேரன் தனது முகநூல் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதனைப்பெற்று ரவிக்குமார் தனது பக்கத்தில் ஒரு குறிப்பை எழுதியுள்ளார்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடல் மற்றும் உடை சார்ந்த கட்டுப்பாடுகள் பற்றிய சுற்றறிக்கை ஆச்சரியம் மிக்க ஒன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பற்றிய எனது நினைவுக்குப் பின்னால் இருப்பவர்கள் பேரா. க.கைலாசபதியும் பேரா. கா.சிவத்தம்பியும். கீழ்த்திசை மொழிகளையும், அவைகளின் இலக்கியங்களையும் அவை உருவாக்கும் சிந்தனை, கருத்து, வாழ்க்கைமுறை என்பதை உலகநோக்கு என்னும் வெளிச்சத்தில் தமிழ் அறிவுலகத்திற்குச் சொன்னவர்கள் இவ்விரு பேராசிரியர்கள். இளைய ஆய்வாளர்களாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று ஆய்வுப்பட்டம் செய்தகாலம் தொடங்கி இறுதிமூச்சு நின்றவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தையும், யாழ்ப்பாணசமூகத்தையும் உலகவரைபடத்திற்குள் நுழைத்து விடுவதற்காகப் பாடுபட்டவர்கள். அவர்களும் என்னை உருவாக்கிய ஆசிரியர்கள். அவர்களின் நூல்களும் எனது ஆய்வு மனத்தைக் கட்டமைத்தவை. அந்தவிதத்தில் அவர்களும் எனது நெறியாளர்கள் என்றே சொல்வேன்.

அவர்கள் பணியாற்றிய அந்தப் பல்கலைக்கழகத்தில் ஒரேயொரு உரையாவது நிகழ்த்த வேண்டும் என்பது வாழ்நாள் ஆசை.இந்த ஆசைக்கு இப்போது செயற்கையான தடையொன்று வந்துவிட்டது. ஜீன்ஸ் போட்ட, தாடிவைத்திருக்கின்ற நபர்களுக்கு அந்தப் பல்கலைக்கழக வளாகம் தடை விதித்துவிட்டது. இந்த வருத்தத்தைக் கவி சேரனோடு பகிர்ந்து கொண்டபோது 'தாடியுடன் நாம் போகிறோம்' என்று சொல்லியிருக்கிறார். அந்த நம்பிக்கை நிறைவேறும் என்று நானும் நம்புகிறேன். ஆச்சரியம் விலகி நம்பிக்கையாக மாறியதில் மகிழ்ச்சி.

இப்போது அதிர்ச்சியூட்டிய நிலைக்கு வருகிறேன். திரு.ரவிக்குமாரின் பதிவில் துரைரத்தினம் என்னும் ஈழத்தமிழர் மிகுந்த வன்மத்தோடு தமிழ்நாட்டுக்காரர்களைத் தூற்றுவதோடு, அவரைச் சாதியைக் குறிப்பிட்டுத் திட்டியுள்ளார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. 'இந்தியாவிலிருந்து படைவரும்; ஈழத்தைப் பெற்றுத்தரும்' என்ற நம்பிக்கையை விதைத்தவர்களைப் பார்த்துக் கோபம் கொள்ள அவருக்குக் காரணங்கள் இருக்கலாம். அப்படிச் சொன்னவர்களை விட்டுவிட்டு திசைமாற்றி அம்பெய்வதில் எந்த நியாயமுமில்லை. அதில் வெளிப் படுவது சாதித்திமிர் மட்டுமே. சாதித்திமிர் மனிதர்களை இந்துசமயம் உற்பத்தி செய்துகொண்டே இருக்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல; இலங்கையிலும் அதையே செய்திருக்கிறது. அதனால் தான் அம்பேத்கர் நான் இந்துவாக இறக்கமாட்டேன் என்றார்.

இந்தியா, இலங்கை மட்டுமல்ல. தென்கிழக்காசிய நாடுகளின் அரசியல் என்பது தொடர்ந்து நிலப்பிரபுத்துவ அதிகாரத்தைத் தக்கவைக்கும் அரசியலாகவே இருக்க விரும்புகிறது. அது அடிமைத்தனத்தை விரும்பும். அந்த விருப்பத்திற்குள் அடிமைப்படுத்தும் மனம் மட்டுமே இருக்கிறது என்பதல்ல; அடிமையாக இருக்கவும் ஆசைப்படுகிறேன் என்ற மனமும் இருக்கிறது.



**அன்னலிங்கம் அருள்வாணி**
பல்கலைகழக மாணவி

தமிழ் மாணவர்களாகிய நாம் அநாகரிக உடையணிந்து செல்வதில்லை. எல்லா விதத்திலும் ஒழுக்கமாகத்தான் இருக்கிறார்கள். திடீரென சேலை கட்ட வேண்டுமென கூறப்பட்டதன் காரணம்தான் தெரியவில்லை. அது சரியான நடைமுறையுமல்ல. தூர இடங்களிலிருந்து பஸ்ஸில் வந்து நாள் முழுக்க பல்கலையில் நிற்பவர்கள் அதிகம். சேலையென்றால் நிறைய சிரமங்கள். மற்றவர்களை சீண்டும் விதமாக பெண்கள் உடையணிகிறார்கள் என்பதெல்லாம் பிழையான கருத்துக்கள்.

எக்குதப்பாக ஆடையணிந்து வருகிறார்கள், இதனால்த்தான் சமூககுற்றங்கள் உருவாகிறதென 'கலாசார காவலர்கள்' பேசுகிறார்கள். ஆபாச லெக்கின்ஸ், இறுக்கமான ரீசேர்ட் போன்ற ஆடைகள் அங்கு தாராளமாக உலாவுகின்றன. சிங்கள மாணவிகள் 'தாராளமாக' உடைகள் அணிய அதை பார்த்து நமது மாணவிகளும் தாராளம் காட்ட தொடங்குகிறார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆடை கட்டுப்பாட்டு விவகாரம் வெளியானதும், தமிழ் சமூகவலைத்தளங்களில் அதி முக்கிய விவகாரமாக பேசப்பட்டது. கடுமையான எதிர்வினையால் 'கலாசார காவலர் தரப்பு' ஆடிப்போய் விட்டது. பல்கலைகழக உபவேந்தர் வசந்தி அரசரட்ணமும் இதுபற்றி பேசினார். 'ஆடைக் கட்டுப்பாடு பற்றி பல்கலைகழக பேரவை தீர்மானம் எடுக்கவில்லை. பல்கலைகத்தில் பெண்களின் ஆடைகள் எல்லைமீறுகிறதென்பது பற்றி கூட்டத்தில் பேசப்பட்டதே தவிர, கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. அந்த கூட்டத்திற்கு வந்திருந்த கலைப்பீடாதிபதி அப்படியொரு கட்டுப்பாட்டு அறிவித்தலை வெளியிட்டு விட்டார். ஆடைக்கட்டுப்பாடு பற்றி யாரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை' என சர்ச்சைகளிற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

**கௌதமி**
பல்கலைகழக மாணவி


சேலை அணிவதில் நிறைய இடர்பாடுகள் உள்ளன.அதனால்த்தான் அதனை வேண்டாம் என்கிறோம். இதற்குள் கலாசாரம் என்பதை இழுக்க வேண்டாம். அப்படியானால் குடித்துவிட்டு பல்கலைகழக சொத்துக்களை சேதமாக்குவது, பெண்களை வசைமொழியால் திட்டுவதெல்லாம் கலாசாரமா? சேலை ஒரு கவர்ச்சியான ஆடை கூட. அத்துடன் காலநிலைக்கு தகுந்த விதத்தில்த்தான் நாமும் உடையணிய முடியும். பெண்கள் சேலையணிய வேண்டுமென கூறும் மாணவர்கள், சேற்றுதிருவிழாவில் பெண்கள் மீது சேற்றை அள்ளி வீசமாட்டோம் என்பார்களா? அதெல்லாம் கலாசாரமா?



பொதுவாகவே நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் மத்தியில் பெண்களின் ஆடைகள் பற்றிய பிற்போக்குத்தனமான பார்வைகள் உள்ளன. ஆனால்,பல்கலைகழகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களிலும் அது எதிரொலிப்பதுதான் அதிர்ச்சி.

ஆடைக்கட்டுப்பாடு பற்றி அறிவித்தவர்கள், இலங்கை பல்கலாசார நாடென்பதை நினைவில் கொள்ளவில்லையென்பது தான் வேடிக்கை. முஸ்லீம் மாணவிகளும் கல்வி பயிலும்யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் 'அனைவரும் சேலையணிய வேண்டும்' என்ற மொட்டை அறிவித்தலின் விளைவுகள் விபரீதமாகும் அபாயமுள்ளது.

நாம்பேசிய சில மாணவர்கள் விபரீத கருத்துக்கள் சொன்னார்கள். பெண்களின் உடைகள்தான் பாலியல்தாக்குதல்கள் அதிகரிக்க காரணமென்றும், அதனால் ஆடைக்கட்டுப்பாடு அவசியம் என்றும் பேசி பீதியூட்டினார்கள்.






# 'பறநாயே' விருது

ஆடைக்கட்டுப்பாட்டு விவகாரம் இன்னொரு திசையில் அதிடியாக சூடு பிடித்துள்ளது. இந்த விவாதங்களின் போதுமுகநூலில்ஊடகவியலாளர்இராதுரைரட்ணம் மட்டரகமாக நடந்து கொண்டுள்ளதாக காரசார விவாதங்கள் எழுந்துள்ளன. தமிழகத்தின் முக்கிய சிந்தனையாளர்களில் ஒருவராக அறியப்பட்டுவரும் ரவிக்குமாரை 'என்னைப்பற்றி கதைக்க உனக்கு என்ன தகுதியிருக்கு பறநாயே' என கள்ளுக்கடை வாசலில் நின்று கதைப்பவர் ரேஞ்சில் பேச பேஸ்புக்கில் எகிறல் ஆரம்பம்.

எகிறலுக்கு காரணம், இலண்டனிலிருந்து செயற்படும் வானொலியொன்று 'வாழ்நாள் சாதனையாளர்' என்ற விருதை அவருக்கு அறிவித்துள்ளது. சாதனையாளர் அறிவிப்பு வெளியாகி சிறிதுநேரத்தில் இந்த சோதனை துரைரட்ணத்திற்கு ஆரம்பித்துள்ளது.

கிழக்கை சேர்ந்த ஊடகவியலாளர் துரைரட்ணம் தற்பொழுது ஐரோப்பிய நாடொன்றில் புலம்பெயர்ந்து வசித்து வருகிறார். கிழக்கில் கருணா பிரிவுடன் புலம்பெயர்ந்து சென்றுவிட்டார்.

யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் ஆடைக்கட்டுப்பாட்டு விவகாரம் 'சர்வ தேச பிரச்சனை'யாக மாறி, பேஸ்புக்கில் விவாதிக்கப்பட்டது. தமிழகத்தின் முக்கிய அறிவு ஆளுமைகள் எல்லாம் தமது கருத்துக்களை வெளியிட்டனர். அப்படியொரு விவாதத்தில் ரவிக்குமாரை ஏடாகூட வார்த்தைகளில் திட்டி எழுதி விட்டார் துரைரட்ணம். அவர் சாதியை சொல்லி திட்டியதுதான் சர்ச்சையாகியுள்ளது. இப்படியான பழமையான சாதிய பார்வை கொண்டவர்கள், சாதிய மனநிலையில் இயங்குபவர்கள் அடையாளப்படுத்தப்படும் ஊடகவியலாளராவது எப்படி? அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கலாமா? இரண்டு விவகாரங்களும் பேஸ்புக்கில் சூடு பிடித்துள்ளது.

துரைரட்ணத்திற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கக்கூடாதென பேஸ்புக்கில் தீவிர போராட்டமொன்றே ஆரம்பித்துள்ளது. பல்வேறு துறை சார்ந்தவர்களும் விருது வழங்கக்கூடாதென கருத்துக்களிட்டு வருகின்றனர். இதற்கு மணித்தியாலத்திற்கு மணித்தியாலயம் ஆதரவு அதிகரித்துக் கொண்டு செல்கிறது.தமிழ்சமூகத்தின் கொடியநச்சுவேர்களில் ஒன்றான சாதிய மனநிலையை ஊடகவியலாளர்களும் காவித்திரிவது கண்டிக்கத்தக்கதே.






# கேள்விக்கு என்ன பதில்?

மக்கள் பிரதிநிதிகளை பொதுமன்றத்தில் நிறுத்தி மக்களுடன் உரையாட வைக்கும் பகுதியிது. தேர்தல் சமயத்தின் பின்னர் உங்கள் பிரதிநிதிகளையே சந்திக்கும் வாய்ப்பு பலரிற்கு கிடைக்காமல் போயிருக்கலாம். உங்களிற்கும், உங்கள் வாக்குகளால் அங்கீகாரம் பெற்றவர்களிற்குமிடையிலான பாலம் இந்தப்பகுதி. இந்த வார அரசியல்வாதி புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன். தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் கடந்த பொதுதேர்தலில் பாராளுமன்றம் சென்றவர். எழுந்தமானமாக சில இடங்களிற்கு சென்று, சிலரை அணுகி, 'சித்தார்த்தனை சந்தித்தால் என்ன கேள்வி கேட்பீர்கள்? சித்தார்த்தனிடம் நீங்கள் கேட்டே ஆக வேண்டுமென நினைக்கும் கேள்வியெது?' என கேட்டோம். அந்தக்கேள்விகளுடன் சித்தார்த்தனை அணுகி கேள்விகளை கேட்டோம். சித்தார்த்தன் அளித்த பதில்கள் இவை.



சித்தார்த்தன்




**ரட்ணம் ஜெலிந்தாஸ்**

சித்தார்த்தன் ஐயா அவர்கள் தேர்தல் காலத்தில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தருவதாக கூறியிருந்தார். இளைஞர், யுவதிகளிற்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமையளிப்பதாக கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை அதற்கு தீர்வில்லை. இந்த தாமதத்தின் காரணம் என்ன? இதை நிவர்த்தி செய்ய என்ன செய்தீர்கள்?

**சித்தார்த்தன்:** வேலை வாய்ப்பின்மையென்பது பெரிய பிரச்சனையாக தொடர்கிறது. எல்லோருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு என்பதில் தொடர்ந்தும் கவனமெடுத்து வருகிறேன். அரச வேலை வாய்ப்பென்பது தேவைகளிற்களவானது. போட்டியும் அதிகம். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தகைமை உடையவர்களிற்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஒத்தாசையாக உள்ளேன்.

தனியே அரசஉத்தியோகங்களை நம்பியராது தொழிற்சாலை, மீன்பிடி, விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் நவீனதொழில்நுட்பத்துடனான வாய்ப்புக்களை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். வடக்கு முதலமைச்சர் நிதியத்தை உருவாக்கி அதனூடாக நிதியை பெற்று இவ்வாறான அபிவிருத்தி, வேலை வாய்ப்பை உருவாக்க முயன்றபோது அரசு அதற்கு ஒத்துழைக்கவில்லை.

இதில் புலம்பெயர்ந்தவர்கள் உதவ முடியும். 30 வருடயுத்தத்தை நடத்தவும், அதனை தாக்குப்பிடிக்கவும் உதவிய உறவுகள் இங்கு முதலிடுவதை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறோம்.



**சுப்ரமணியம்**

ஆளுங்கட்சியின் சில தவறுகளை கண்டும் காணாமலும் விடுவதற்குரிய காரணம் என்ன?


**சித்தார்த்தன்:** சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை, உயர்பாதுகாப்பு வலய காணிகள் விடுவிப்பு, மீள்குடியேற்றம், போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கான உதவிகள் போன்றவற்றில் அரசு மெத்தனமாக இருப்பதை பாராளுமன்றத்தில் உள்ளேயும், வெளியேயும் சுட்டிக்காட்டியே வருகிறோம். அரசியல் தீர்வு பற்றிய எமது தெளிவான நிலைப்பாட்டை அரசிற்கு தெரிவித்துள்ளோம். தவறுகளை கண்டும் காணாமலுமிருக்கிறோம் என்பது சரியாகாது. அதேவேளை பாராளுமன்ற எதிர்க்கட்சியென்ற வகையில் ஆளுங்கட்சியின் தவறை சுட்டிக்காட்டுவதும், எதிர்ப்பதும் எமது கடமையே.



**சின்னண்ணை**

சிறையில் வாடும் அரசில்கைதிகளின் விடுதலைக்காக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? அரசாங்கத்திற்கு என்ன அழுத்தம் கொடுத்துள்ளீர்கள்?


**சித்தார்த்தன்:** அரசியல்கைதிகளின் விடுதலை விடயத்தில் பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் குரல் கொடுப்பது மட்டுமல்லாமல் அரசுதரப்புடன் ஜனாதிபதி மட்டத்தில் கூட பேச்சுக்களை நடத்தி அவர்களின் விடுதலையில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. ஆயினும் பின்னர் அரசு இவ்விடயத்தில் தொடர்ந்து இழுத்தடிப்புக்களை செய்து வருகிறது. அரசு ஒத்துக்கொண்ட விடயத்திலிருந்து பின்வாங்கியுள்ளதென்பதை வெளிநாட்டுதூதுவர்கள், ஐ.நா பிரதிநிதிகள், மனிதஉரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கு விளங்கப்படுத்தியுள்ளோம். எவ்வாறாயினும்கொடுக்கப்படும் அழுத்தம் என்பது எமது பலத்திற்கேற்பவே இருக்குமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.



**ஆறுமுகம்**

வடமாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை திருப்பியனுப்பியதற்குரிய சரியான காரணத்தை சொல்லுங்கள். இதுவரை நான் அறிந்த பதில்கள் எதுவும் திருப்திகரமானவை அல்ல.

**சித்தார்த்தன்:** இது தொடர்பான சரியான பதிலை நான் தருவது கடினம். ஊடகங்களில் வெளியானதுபோல பெரிய அளவில் நிதி திரும்பவில்லையென்றே அறிகிறேன். எவ்வாறாயினும், ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு ரூபாவேனும் திரும்பியிருந்தால் அது மாகாணசபையின் வினைத்திறனை கேள்விக்குட்படுத்தவே செய்யும். இனிவருங்காலங்களில் துல்லியமான திட்டமிடல்கள் மூலம் அது தவிர்க்கப்படல் வேண்டும்.



**கோபிநாத்**

சம்பந்தன் ஐயா 2016 முடிவிற்குள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு கிட்டுமென கூறியிருக்கிறார். நீங்களும் அதை ஆமோதித்திருக்கிறீர்கள். இது எவ்வாறு சாத்தியம்? இதற்கான என்ன நடவடிக்கை உங்களால் செய்யப்படுகிறது?

**சித்தார்த்தன்:** 60 வருடகால முயற்சிகள் பயனளித்திருக்கவில்லையாயினும் நம்பிக்கையீனத்துடன் எந்த முயற்சிகளையும் மேற்கொள்ள முடியாது. சம்பந்தன் அண்ணர் கடந்த ஜனாதிபதி தேர்தலில் காலம் முதல் 2016இல் ஒரு நிரந்தர தீர்வு பெற்றுத்தருவேன் என கூறி வருகிறார். தமிழ் மக்களும் அதற்கான ஆணையை அவருக்கு வழங்கியுள்ளனர். அவர் மேற்கொள்ளும் இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் எதுவும் பின்னடைந்து விடக்கூடாது என்பதில் அக்கறை கொண்டுள்ளேன்.





கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகப்பிரிவில் தாய், தந்தையை இழந்த மற்றும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற 32 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகள் பிரதேச செயலத்தால் வழங்கப்பட்டது.






# சிறையில் வாழும் குடியிருப்பு

இலங்கைக்குள் கூகிள் பலூனும் பறக்கத் தொடங்கிவிட்டது. பெருநகரங்கள் விரைவாக உருவாகிக் கொண்டிருக்கிறது. இலங்கையர்களின் பொருளாதார நிலையும் வளர்ந்து கொண்டு செல்கிறது. எல்லாவற்றிலும் இலங்கை வளர்ந்து கொண்டிருந்தாலும், கண்டுகொள்ளப்படாமலுள்ள பகுதிகளும், மக்களும் இருக்கிறார்கள்தான்.

கிழக்கின் எல்லையோர கிராமங்கள், வன்னியின் ஆழத்திலுள்ள கிராமங்கள், மலையகத்தின் கிராமங்கள் என அதிகாரிகளால் கண்டுகொள்ளப்படாத கிராமங்கள் ஏராளம். அடிப்படை வசதிகள், எதிர்கால வாய்ப்புக்களற்ற எண்ணற்ற கிராமங்களில் ஒன்றே நோர்வூட் மேற்பிரிவு.

நோர்வூட் நகரத்திலிருந்து மூன்று கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ளது இந்த கிராமம். பெரும்பாலும் தோட்ட தொழிலாளிகள்தான். மிகச்சிலர் வேறு கூலி வேலைகளிற்கு செல்கிறார்கள். அன்றாட சீவனோபாயத்திற்கே அதிகம் போராடும் குடும்பங்கள்தான் இந்த குடியிருப்பில் அதிகம். இங்கு பன்னிரண்டு காம்பராக்களுள்ளன. அதில் பன்னிரண்டு குடும்பங்களை சேர்ந்த சுமார் அறுபது பேர் வரை வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த குடியிருப்புக்கள் அனைத்தும் வெள்ளையர் ஆட்சியிலிருந்த சமயத்தில் கட்டப்பட்டவை. மிகச்சிறியளவில் கட்டப்பட்ட அந்த லயன்கள் இப்பொழுது மனிதப்பாவனைக்கு உகந்தவை அல்ல.

முறையான வாழிடம், தொழில் இல்லாமல் அந்த குடியிருப்பு மக்கள் படும் சிரமங்கள் சொல்லில் அடங்காதவை. பருவமடைந்த பெண்கள், புதிதாக திருமணமானவர்கள் அங்கு நெருக்கடிகளை சந்திக்கிறார்கள். வீடு, தொழில் வசதிகள் இல்லாமல் நிறைய திருமணங்கள் தடைப்பட்டுக் கொண்டுமுள்ளன.

இந்த குடியிருப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால்களில் ஒன்று காம்பராக்கள் எப்பொழுதென்றாலும் இடிந்துவிழும் அபாயமுள்ளது. சிறிய பிள்ளைகளை வீட்டில் தனியாக விட்டு செல்ல முடியவில்லை, அதனால் தொழில் இழப்பு ஏற்படுகிறதென பெற்றோர் கூறுகிறார்கள்.

நோர்வூட் மேற்பிரிவில் வீடுகள் மட்டுமே மோசமாக உள்ளன என்றில்லை. குடியிருப்பின் உட்கட்டுமான வசதிகள் முற்றிலும் மோசமான நிலையிலேயே உள்ளது. வீதி, குடிநீர், வடிகாலமைப்பு, போதிய வீடுகளின்மை, மலசலகூடமின்மை என பட்டியல் நீள்கிறது. மொத்தத்தில் இந்த குடியிருப்பு முற்றிலும் புதியதாக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. போக்குவரத்து வசதிகள் அறவே கிடையாது.

அவர்கள் சந்திக்கும் அடுத்த சவால் மின்சாரம். அங்கு முறையான மின்சார வசதி ஏற்படுத்திக கொடுக்கப்படவில்லை. இன்றும் குப்பிவிளக்குகள் ஒளிரும் காம்பராக்கள் அனேகம். ஏற்கனவே வாழ்வியல் நெருக்கடிகளை சந்திக்கும் அங்குள்ள மாணவர்கள் கல்விக்காகவும் போராட வேண்டியுள்ளது.

குப்பிவிளக்கில் கல்வி பயிலும் தலைமுறை இனியும் வேண்டாம் என்பதே அங்குள்ள ஒவ்வொருவரின் உடனடி கோரிக்கையாக உள்ளது.

தமது வாழ்வில் எப்பொழுது விடியல் பிறக்குமென்பதே அவர்களின் அடுத்த கேள்வி. மலையகத்தில் எத்தனையோ தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் இருந்தும் தமது வாழ்வில் விடியல் இல்லையென்பதே அவர்களின் தீராத துயரம்.

சிறைக்கூடங்கள் போன்ற காம்பராக்களில் வாழ்ந்த வாழ்க்கை எங்களுடன் முடிந்து போகட்டுமென ஒவ்வொருவரும் சொல்கிறார்கள். மலையகத்தில் தற்பொழுது அதிகம் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் தனிவீடுகளிற்காக இந்த மக்களும் காத்திருக்கிறார்கள்.

அதிகாரிகளே... அரசியல்வாதிகளே... இனியாவது இந்த மக்களையும் திரும்பிப் பார்ப்பீர்களா?





KIRUBAA LEARNERS
KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நல்ல சாரதி எப்பொழுதும் வீதி ஒழுங்குப்பற்றி விழிப்புடன் இருப்பார்.
பெண்களாலயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 | 021 492 3200 | 077 722 5292

செல்வம்
selvam@deepam.lk





### யேசுவும் கனவில் வந்தார்...

# இறந்தவர்களிற்கும் உயிர்கொடுக்கிறேன் 'மிரட்டும்' பூசாரி

இரண்டு மணித்தியாலங்களின் முன்னர் இறந்தவரை உயிர்ப்பிக்கிறார்... அரச வைத்தியசாலையின் பிரேதஅறையில் இருந்த சடலத்திற்கு உயிர்கொடுத்தார்... தீராத நோய்களையெல்லாம் தீர்த்து வைக்கிறார் ஒரு பூசகர் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டுமென்கிறார்கள் கரடிக்குன்று மக்கள். அங்குள்ள பூசகர் ஒருவர் இப்படியான அற்புதங்கள் செய்கிறார் என பக்தி சிரத்தையுடன் கூறுகிறார்கள் மக்கள். ஒரு கிராமமே மெய்மறந்திருக்கும் அதிசயத்தை பார்க்க உடனே கிளம்பினோம்.

கரடிக்குன்று கிராமத்தில் ஆதிபராசக்தி நாகபூசணி அம்மன் என்றொரு ஆலயம் உள்ளது. தீராத வியாதியுடையவர்கள், பேய் பிடித்தவர்கள் என ஏராளம் பேர் அங்கு நிறைந்திருக்கிறார்கள். அங்குள்ள பூசகரே இப்படியான அற்புதங்களின் சொந்தக்காரரர் என ஊரில் பவ்வியமாக பேசுகிறார்கள். பூசகர் அம்பிகைதாசனின் பெயரை கேட்டாலே அந்தப்பகுதி அதிருது.

ஏராளம் கதைகளை தனக்குள் வைத்துள்ள வன்னிமண்ணின் கிராமங்களிலொன்றே கரடிக்குன்று. முழங்காவில் பிரதேசத்தில் உள்ளது. முழங்காவிலிற்கும் நாச்சிக்குடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது இந்த மிகச்சிறிய கிராமம். அங்குதான் உள்ளது பிரம்மம் ஆதிபராசக்தி நாகபூசணி அம்மன் ஆலயம்.

அங்கு அம்பிகைதாஸன் என்ற பூசகர் இருக்கிறார். அவரால் முடியாதது எதுவுமில்லை... தீராத வியாதியுடையவர்களை குணப்படுத்துவது, இறந்தவர்களை உயிர்ப்பிப்பதெல்லாம் அவருக்கு மிகச்சாதாரணம் என்று ஊரில் நம்புகிறார்கள்.

அந்த வளவிற்குள் நான்கு மூலைகளிலும் நான்கு சிறிய ஆலயங்கள் உள்ளன. ஆயிரம் வருடங்களின் முன்னர் அங்கு பெரியதொரு ஆலயம் இருந்ததாகவும், அம்மன் கனவில் வந்து அதை சொன்ன பின்னர் தான் இப்பொழுது புதிதாக ஆலயம் அமைத்துள்ளதாகவும் அம்பிகைதாசன் கூறினார்.

**அ.அம்பிகைதாசன்**
பூசகர்

எனக்கு எட்டு வயது இருக்கும். நாள் இரவு வீட்டில் விளக்கு அணைந்துவிட்டது. பக்கத்தில் இருக்கும் கடைக்குச் சென்று மண்ணெண்ணெய் வாங்கி வர அம்மா அனுப்பினார். மண்ணெண்ணெய் வாங்க கானை எடுத்துக் கொண்டு வீட்டுக் கதவைத் திறந்தேன். மழைநேரத்தில் மின்னுவதைபோல ஒரு மின்னல் வெளிச்சம் எனக்கு முன்னால் இறங்கியது. சிவப்புசெலை, தங்கஆபரத்துடன் ஒரு அம்மா தோன்றி, 'மகன் வா. வீதியில் பள்ளமிருக்கு. நான் கூட்டிக்கொண்டு போறன்' என எனது கையை பிடித்து கடைக்கு கூட்டிச்சென்று மண்ணெண்ணெய் வாங்கி, மீண்டும் வீட்டுக்கு கொண்டுவந்து விட்டார். பின்னர் மறைந்துவிட்டார்.

இதேபோல பின்னரொரு நாள் நபிகளும் என் கனவில் வந்தார். இயேசுவும் என் முன் தோன்றினார். இதை சொன்னால் யாரும் நம்ப சிரமப்படுவார்கள். உண்மையிதுதான். அதனால்த்தான் மக்கள் இன்னும் நம்பிக்கையுடன் வருகிறார்கள்.

சுற்றயல் பிரதேசங்களில் இருப்பவர்களில் பேய் பிடித்தவர்கள், பில்லி சூனியத்தால் பாதிக்கப்பட்டவர்கள், தீராத வியாதியுடையவர்கள் எல்லோரும் வந்து தங்கி நின்று சிகிச்சை பெற்று செல்கிறார்களாம். இவர்களை விட, இலங்கையின் பல பகுதிகளுமிருந்தும் அம்பிகைதாஸனின் பெயரைக் கேட்டு வருகிறார்கள். ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இங்கு வந்து சென்றிருப்பார்கள் என்கிறார்கள். இங்கு வரும் ஒருவர் ஏழுநாட்கள் தங்கியிருக்க வேண்டும். அதற்குள் குணமாக்கி விடுகிறார்கள். தவறினால் தமிழ் மருந்துகளை பாவித்து குணப்படுத்துகிறார்கள்.

இங்கு நடக்கும் பேய் விரட்டல் வித்தியாசமானது. உடுக்கு அடித்தோ, அதிக சத்தம் எழுப்பியோ எதுவும் செய்யப்படுவதில்லை. அமைதியான முறையில் தியானம் செய்து பேயை விரட்டுகிறார்கள். பூசைகளின்போது அங்கு அக்கினி மூட்டுகிறார்கள். பேய், பிசாசு, கெட்ட ஆவிகளை பிடித்து அதிலே போட்டு பஸ்பமாக்குகிறார்கள். வழக்கமான மாந்திரீக நடைமுறைகளில் உள்ள கழிப்பு கழித்தல் அங்கு நடப்பதில்லை.

அங்கு நடக்கும் பேய் விரட்டலை பார்த்தோம். வழக்கமான பேய் விரட்டல்களை விட வித்தியாசமானதாக இருந்தது. உடுக்கு அடித்தோ அல்லது சத்தம் போட்டோ உடம்பில் இருந்து பேயை விரட்ட முயற்சிக்கவில்லை. அமைதியான முறையில் தியானம் செய்து பேயை விரட்டுகிறாலீ;கள். தியானத்தின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி பேயை செயலிழக்க வைத்து, அங்கு மூட்டப்பட்டுள்ள அக்கினியில் போட்டு பஸ்பமாக்குகிறார்களாம்.



அ.அம்பிகைதாஸன்

நாங்கள் சென்றபோது பேய் பிடித்தவர்கள், சூனியம் செய்யப்பட்டவர்கள் என பலர் அங்கு கொண்டுவரப்பட்டிருந்தனர். ஆலயத்தின் முன்பகுதியில் பூசகர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்பாக நெருப்புமூட்டப்பட்டிருந்தது. பேய் பிடித்தவர்களை பூசகரின் முன்பாக கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். பூசகர் கண்ணைமூடிக்கொண்டு தியானம் செய்கிறார். இதுதான் அங்கு நடைமுறை.

ஆலயசூழலில் பவ்வியமாக பலர் காத்திருக்கிறார்கள். நோயாளிகள், நோயாளிகளுடன் வந்தவர்கள் எல பலர். அனேகமாக வன்னியின் சிறு கிராமங்கள், மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், புத்தளம் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் இருந்தார்கள். எல்லோருடமும் ஆலயத்தில் அதிக நம்பிக்கை இருந்ததை அவதானிக்க முடிகிறது. நம்பிக்கைதானே வாழ்க்கை.

இதைவிட இன்னொரு அதிர்ச்சிகதையை அங்குள்ளவர்கள் சொன்னார்கள். இரத்தினக் கல்லுடன் நாகபாம்புகள் அங்கு உலாவுகின்றனவாம். நாகபாம்புகளை பார்த்ததாக கோயிலுக்கு வரும் பலரும் கூறினார்கள். இறுதியுத்த சமயத்தில் அங்கிருந்து எல்லோரும் இடம் பெயர்ந்த போது, பதினாறு நாகபாம்புகள் இரத்தினக்கல் மினுங்க வரிசையாக வந்து பார்த்துக் கொண்டு நின்றதாகவும், இடம்பெயர்ந்தவர்கள் அதை பார்த்து கொண்டு நின்றதாகவும், சிறிது நேரத்தில் அவை மறைந்து விட்டதாகவும் கூறினார்கள்.

ஆலயத்தில் தொண்டுசெய்யும் ஒருவருடன் பேசினோம். அவர் சில 'மிரட்டல்'கதைகள் சொன்னார்.

1. 18 வருடங்களின் முன் மல்லாவி வைத்தியசாலையில் இளம்பெண்ணொருவர் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி அந்தப்பெண் இறந்துவிட்டார். பிரேதஅறையில் சடலம் வைக்கப்பட்டது. சடலத்தை பொறுப்பேற்ற உறவினர்கள் மாலையில் இந்த ஆலயத்திற்கு கொண்டு வந்துள்ளனர். பெண்ணின் உடலை ஆலயத்தில் வைத்துவிட்டு பூசகர் தியானத்தில் இறங்கிவிட்டார். நள்ளிரவு 12 மணியளவில் அந்த பெண் உயிர்பெற்றுவிட்டார்.
2. பூநகரியை சேர்ந்த மெக்கானிக் ஒருவர் இறந்துவிட்டதாக கூறி சடலத்தை உறவினர்கள் கொண்டு வந்துள்ளனர். 2 மணித்தியாலத்தில் அவர் உயிர்பெற்றுவிட்டார். அவரது மரணவீட்டிற்குசென்றவர்கள் இதை பார்த்து அதிர்ச்சியுடன் திரும்பி சென்று விட்டனர்.

ஆலயத்தின் ஊடாக அறப்பணிகளும் நடக்கின்றன. பின்தங்கிய மாணவர்களுக்கு வருடத்துக்கு ஒரு முறை கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. புலமைப்பாஜீசில் பாறிட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதுடன், 100 இற்கும் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயரில் வங்கிக்கணக்கொன்றைத் திறந்து ஆயிரம் ரூபா வைப்பில் இடுகின்றனர். அந்தக்கிராமத்தில் உள்ள இந்து வீட்டில் யாராவது இறந்தால் மரணச்செலவுக்கு பத்து ஆயிரம் ரூபாய் பணம் வழங்கி அவர்களுக்கு இரவு உணவும் வழங்கப்படுகிறது.





# சோதிடம் தரும் வாரபலன்கள்

## 28.02.2016 முதல் 05.03.2016 வரை

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



**மேடராசி**

மனவியாகுலம், சம்பத்துக்கள் சில சேர்தல், சில சுபபலன் காட்டுதல், அவதூறுக்கு ஆட்படுதல், தேகசௌக்கியம் கிட்டுதல், திரவியலாபம், போசனசுகம் கிடைத்தல், சிறுதுக்கம் இருத்தல், பிரயாணங்களில் எச்சரிக்கை, வயிற்றில் ரோகம், கருமம் கைகூடுவதில் தாமதம், வார நடுப்பகுதியின் மேல் சந்தோசம் காணப்படுதல், நன்மைகள் கிட்டுதல், பணவரவு மற்றும் உஷ்ணம் சம்பந்தப்படும் வியாதி வந்து குணமாகும். ஆடை, அலங்காரம் அமைதல், குடும்பசுகபோகம் கிடைக்கும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,03,04 திகதிகள்.**

**இடபராசி**

குடும்பசுகம், இனசனபந்துசுகம் கிடைத்தல், சிறுசிறு சச்சரவுகளால் மன அமைதி குலைதல், உடல் நலம் பாதிக்கப்படுதல், சிநேகவிரேதம், இடையில் சந்தோச நிலை உருவாதல், லாபகரமான நிலை காணுதல், பணவிரயம், பயணங்களில் பாதிப்பு நிலை, தானதர்மம் செய்யும் நிலை, ஐஸ்வர்யம், சேமிப்பு நிலை காணப்படுதல், வார இறுதியில் வெற்றி நிலை, லாபம் அதிகரிப்பு நிலை, மற்றும் சில கௌரவக் குறைவு சம்பவநிலையும், சொத்துக்கள் தொடர்பில் சாதகநிலையும், தாயாருக்கு உடல்பாதிப்பு, பெண்கள் ஆதரவு, சில பிணக்குகளையும் சந்திக்கச் செய்யும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 28,02,04 திகதிகள்.**

**மிதுனராசி**

சுபம், சம்பத்து, கெட்டவார்த்தை கேட்டல், குடும்பசுகம் கிட்டுதல், பெண்களினால் சில நன்மைகள், சந்தோசம், செய்கருமம் நஷ்டம், சோகநிலை, வியாதி, மனச்சந்தோசம், போசனசுகம், குடும்ப உறவு சுகபோகம் அமைதல், இடையிடையே சில இடையூறுகள், மறதிகள், மனப்பயம் மற்றும் கண்கள், வயிறு, தலை போன்ற உறுப்புக்களில் நோய் அதிகப்படுதல், வாகனசுகம் கிட்டுதல், மற்றும் பலவகையான முயற்சி, முன்னேற்றம், சிறுசிறு பிணக்குகள், நல்ல ஆடை, அணிகலன், இனத்தவர் வருகை, தூரத்தில் இருந்து செய்தி கிடைத்தல், வதிவிடம் மாறி இருத்தல் போன்றவை தரும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,02,05 திகதிகள்.**

**கடகராசி**

மனவியாகுலம், சுபம், சம்பத்துக்கள் சேர்தல், தேகசுகம் நன்றாய் அமைதல், அவமானநிலை, பணவரவுகள் இருத்தல், சிலர் மீது நம்பிக்கையீனம் கொள்ளுதல், கருமங்கள் சில தாமதமாதல், மனதில் படிப்படியாய் சந்தோச நிலை தோன்றுதல், பெண்களுக்கு நோய் பிணி காட்டுதல், புத்தி மேன்மை பெறுதல், சாதகமான முடிவுகள் எட்டுதல், மற்றும் வீண்செலவுகள் இருத்தல், அலைச்சல், விபத்து நிலை, ஆபத்து நிலை ஏதும் காணப்படுதல், கல்வி சார் முயற்சிகளில் முன்னேற்றம் இருத்தல், தூரதேச செய்தி கிடைத்தல், நண்பர்கள் எச்சரிக்கை, வீணான மனஸ்தாபங்களையும் காட்டுதல்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 29,01,02 திகதிகள்.**

**சிம்மராசி**

குடும்பசுகம், இனசனபந்துசுகம், சிறுசிறு மனக்குழப்பம், மன அமைதி குறைதல், உடல் நலக்குறைவு, பொருள் விரயம், பகை உருவாதல், செய்தொழிலால் நன்மை, சந்தேகிக்கும் நிலைகள் ஏற்படுதல், தொடங்கும் கருமம் இழுபறிநிலை காட்டுதல், வகிக்கும் நிலையில் ஏதாவது மாற்றம் இருத்தல், நோய் பிணியால் மனக்கவலை அதிகம், மனதில் பயஉணர்வு காணுதல், பணவரவுகள் அமைதல், சில அவதூறுகளை எதிர்கொள்ளல், மனைவியைப் பகைத்தல், வார இறுதியில் எல்லாம் சுகபலனாய் நிறைவேறவும் மற்றும் தூர இடத்திலிருந்து செய்தி கிடைத்தல், ஆலய வழிபாடும், சொற்பொழிவு கேட்டல் என்பவையும் உண்டாகும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 29,03,04 திகதிகள்.**

**கன்னிராசி**

மனச்சஞ்சலம், சொத்துசுகம் அனுபவித்தல், பெண்களினால் நன்மையும், சுகமும் அனுபவித்தல், தேகசுகம் குறைவு நிலை பெறுதல், வாக்குவாதப்படுதல், நஷ்டநிலை தோன்றுதல், வாரநடுப்பகுதியில் லாபநிலை, மனச்சந்தேசம் கொள்ளல், நல்ல கௌரவம் கிடைத்தல், பிரயாணங்களால் நன்மை உண்டாதல், மற்றும் நோய் பிணி குணமாதல், போசனசுகம், தொழில் விருத்தி உண்டாதல், கல்விசார் முயற்சிகள் பலனளித்தல், வெளிநாடு செல்லும் முயற்சிகள் சாதகமாக நிலைபெறுதல், பெரியவர்களைச் சந்தித்தல், வியாபார முயற்சி போட்டி பெறுதல், சுற்றத்தினர் நண்பர்கள் வருகை, சுபமான பெறுபேறு கிட்டுதல் போன்றவை காணப்படுதல்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,02,05 திகதிகள்.**

**துலாம்ராசி**

செல்வம், சேமிப்பு நிலை, இனசனபந்துக் களைச் சந்தித்தல், பெண்களால் சுகம் கிட்டுதல், தேகசுகம் நல்ல நிலையில் இருத்தல்,இடையில் சில அவதூறுகளைக் கேட்கும் நிலை, வாக்குவாத நிலையில் சில நஷ்டம், பின்பு லாபத்தை நோக்கிய செயல் காணப்படுதல், சில உறவுகளின் நோய்ப்பிணிக்கு பணவிரயமிருத்தல், இனசனபந்து வருகைகள், மனதில் சிறு துயரம் வந்து மறைதல், ஆடை,ஆபரணம் சேர்தல், கண்,வயிறு, தலை போன்ற உறுப்புக்களில் ஏதாவது நோய் வந்து குணமடைதல், முக்கிய தேவைக்கு கடன்படும் நிலை, ஆயுதம், இயந்திரம், உபகரணம் இவற்றால் தீங்கு ஏற்படுதல், மற்றும் செலவீனம், அலைச்சல் கொள்ளல், விற்றல் என்பன நலமாயும் முடிவடையும் பலனுண்டு.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,02,04 திகதிகள்.**

**விருச்சிகராசி**

தேகசுக நன்மை, இனசனபந்துசுகம், சிறுசிறு அவமானநிலை, செயல்களில் புத்திக்குறைவு, மாறிமாறி இலாப, நஷ்டம் அனுபவித்தல், உற்சாகமாய் செயற்படுதல், எதிரியால் மனப்பயம் கொள்ளுதல், வெற்றிகளை முடிவில் பெறுதல், சிறுசிறு பணவிரய நிலை காணுதல், வரவேண்டிய நிதி வருவாய் கிடைத்தல், நித்திரைக்குறைவு மற்றும் நல்ல ஆடை, ஆணிகலன்கள் சேர்த்தல், பிறர் உதவி சிலருக்குக் கிடைத்தல், சுபச்செய்திகள் கிட்டுதல், திருடர் பயம், அரச அதிகாரிகளை சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தல், போன்ற பலன்களை அனுபவிக்க இடமுண்டு.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,03,04 திகதிகள்.**

**தனுசுராசி**

மனச்சஞ்சலம், பொருள்சேர்க்கை, தேகசுகம், செய்தொழில் நல்ல நிலை காணுதல், இடையிடையே சிலசில கெட்டவார்த்தைகள் கேட்கும் நிலை, கணவன், மனைவி நல்ல உறவுகள் அமைதல், சில சந்தர்ப்பங்களில் புத்திமந்தம், பின்னர் விவேகம் நன்மைகள், ஆடைஆபரணம்,பொருள் சேர்தல், கருமங்களில் வெற்றி கிட்டுதல், சிறுசிறு பணவிரயம் எதிர்பாராது ஏற்படுதல், இனசனசுற்றம் நண்பர் வருகை, நல்ல நிகழ்வுகளில் பங்கேற்றல் மற்றும் வாகன சுகம், உத்தியோகம்சுகநிலை, சிறு மனத்துயரம் வந்து மறைதல், வெளிநாடு பயண வாய்ப்புக்கள் அமைதல் என்பவை தரும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 29,02,03 திகதிகள்.**

**மகரராசி**

சுபமான சௌக்கிய நிலை, குடும்ப சுகபோகம், நல்ல பண்புகளை வெளிக்காட்டும் நிலை, பணவிரயம் இருத்தல், காரியதாமதம், மனச்சஞ்சலம், கௌரவக்குறைவு நிலை, வார நடுப்பகுதியின் மேல் நல்ல அதிகார தோரணை அமைதல், நிலையாகப் பல காரியங்களையும் செய்தல், திரவிய லாபம், சிறுசிறு நோய் வந்து குணமாதல், பணவரவு இருத்தல், மனச்சந்தோசம் கொள்ளும் நிலை உருவாதல். இடையில் சில தடங்கல் நிலை, எதிரி பகையாளி தொல்லையைச் சந்தித்தல், மற்றும் சுப கருமங்களில் பங்கேற்றல், லாபகரமான செயல்களில் ஈடுபடவும் பலன் செய்யும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,02,04 திகதிகள்.**

**கும்பராசி**

உடல் நலக்குறைவு, சச்சரவுகளால் மன அமைதி குலைதல், கெட்டவார்த்தை கேட்கும் நிலை, பிரயாணம் மேற்கொள்ளும் நிலை, இருக்கும் நிலைகளுக்குப் பங்கம், மந்த புத்தி, பெண்கள் சுகம் கிடைத்தல், குடும்ப உறவு நன்மை, நோய் பிணிக்கு பணவிரயம், வயிற்றில் வியாதி, மனப்பயம் கொள்ளல் பின்னர் எல்லாம் சுபமாய் முடிதல், திரவியலாபம், வெற்றி, பயணம் செய்யும் நிலை தருதல், மற்றும் போசன சுகம், தனதானிய லாபமிருத்தல், மனதில் நிம்மதி சந்தோசம், உற்சாகம், தூரச்செய்தி அறிதல், பெரியோர் நட்பு, சிலருடன் வாக்குவாதப்படும் நிலையும் காணப் படும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 01,02,05 திகதிகள்.**

**மீனராசி**

சௌபாக்கிய நிலைகள் தென்படுதல், பெண்களினால் நன்மைகள், உதவிகள் கிட்டிவருதல், இடையில் மனதில் துயரம், செய்தொழில் மேன்மை சிறப்பு உற்சாகம் தருதல், பயணங்களில் எச்சரிக்கை நிலை, வயிற்றில் நோய், மனப்பயம், பின்னர் எல்லாம் சுகபலன் காட்டுதல், இடையிடையே சிறுசிறு நஷ்ட நிலை, குடும்ப சுகம் போகம் இருத்தல், எதிரி, பகையாளி தொல்லை இருத்தல். மற்றும் தாயாருக்கு நோய் பிணி காட்டுதல், தன, தானிய விருத்தி நன்மைகள், அதிகாரிகள் சந்திப்பு, கருமங்களை வெற்றியாய் முடித்தல், தெய்வ வழிபாடும் இருக்கும் பலன்களை அனுபவிக்கச் செய்யும்.


அதிர்ஸ்ட நாட்கள்: 29,02,03 திகதிகள்.

சந்திராஷ்டமம் உள்ள நாட்களில் நோய், பிணி, துன்பம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்புக்கள் ஏற்படலாம் என்பது சோதிட விதி ஆகும். இதனைக் கருத்தில் கொள்ளவும்.

**இவ்வார சந்திராஷ்டம நிலை.**

மீனம்: 28,29 திகதிகள்.
மேடம்: 01,02 திகதிகள்.
இடபம்: 03,04 திகதிகள்.
மிதுனம்: 05,06 திகதிகள்.

ஏனைய இராசிக்கும் இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.




## ஜாலி கிளிக்

சமூக வலைத்தளமான ஃபேஸ்புக்கில் லைக் பட்டனோடு சேர்த்து புதிய பட்டன்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

லவ், ஹா ஹா, வாவ், சேட், அங்கிரி என கூடுதலாக 5 பட்டன்கள் தற்போது சேர்க்கப்பட்டுள்ளன.

ஃபேஸ்புக்கில் நண்பர்கள் பகிரும் பதிவுகளுக்கும், படங்கள் மற்றும் வீடியோக்களுக்கும் பின்னூட்டம் இடும் வசதியும், விரும்பும் (லைக்) வசதியும் இதுவரை இருந்துவந்தது.

நீண்ட காலமாக, பிடிக்காத பதிவுகளுக்கு அன்லைக் (விரும்பவில்லை) என்ற பட்டனை ஃபேஸ்புக் அறிமுகப்படுத்த வேண்டும் என பல பயனாளர்கள் கோரி வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது இதற்கு மாற்றாக, லைக் பட்டனோடு சேர்த்து இன்னும் 5 தெரிவுகளை ஃபேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் குறியீடுகளாக தம்ஸ் அப் வடிவம், இதய வடிவம், வாய்விட்டு சிரிக்கும் ஸ்மைலி, ஆச்சரியமாகப் பார்க்கும் ஸ்மைலி, சோகமான ஸ்மைலி மற்றும் கோபமான ஸ்மைலி ஆகியவை தரப்பட்டுள்ளன.

வழக்கமாக இருக்கும் லைக் பட்டன் மேல் மவுஸைக் கொண்டு சென்றால் இந்த தெரிவுகள் தோன்றும்.

இந்த புதிய அம்சத்துக்கு ஃபேஸ்புக் பயனாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.



## இரண்டு மாத வாழ்க்கை

இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே உயிர்வாழும் நிலையில் உள்ள பெண் ஒருவர் தனது உயிரை காப்பாற்ற (குருத்தணு) ஷிமீ மீனீ தானம் செய்பவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானியாவின் லண்டனில் உள்ள வோல்தம்ஸ்டோ (கீணீரீமீ லீணீனீடமீ ஷீஷ்) பகுதியை சேர்ந்தவர் வித்யா அல்போன்ஸ். முல்லைத்தீவை சேர்ந்த இவர் அங்குள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கண் தொடர்பாக படித்து வருகிறார். காய்ச்சல் மற்றும் உடல் வலி ஏற்பட்டதால் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

அங்கு அவரது இரத்தத்தை பரிசோதித்து பார்த்த மருத்துவர் லூக்கிமியா என்னும் இரத்த புற்றுநோயால் வித்யா பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் மிகுதியாக உள்ளதால் ஏற்படும் இந்நோய் இரத்த அணுக்கள் உருவாகும் இடத்தில் ஏற்படுவதாகும். சில மாதங்களில் அவர் இறந்துவிடுவார் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சில வாரங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த வித்யா மேலதிக சிகிச்சைக்காக லண்டனில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு உடனடியாக குருத்து அணு மாற்று சிகிச்சை செய்யவேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவரது சகோதரரின் குருத்து அணுவை மருத்துவர்கள் சோதித்ததில் 50 சதவீதம் மட்டுமே ஒத்துப்போனது.

எனவே அவருக்கு குருத்து அணு தானம் பெறுவதற்காக குருத்தணு தானம் தொடர்பான விழிப்புணர்வை அவரது பெற்றோர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக வித்யா கூறுகையில், ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் எனக்கு ஆதரவாக குறுஞ்செய்தி அனுப்பி வருகின்றனர். எனக்கு நம்பிக்கையாக உள்ளது. இந்த விழிப்புணர்வு மூலம் எனக்கு நன்மை ஏற்படவில்லை என்றாலும் கண்டிப்பாக யாருக்காவது நன்மை ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்


ஜி.பிரியதர்சினி


இ.டயாளினி


சு.சாலினி

செல்வம்
selvam@deepam.lk

நம்மவர்களின் மூளைக்கு வேலை கொடுக்கும் 'எக்ஸாம் என்டர்ரெயின்மென்றி'ற்காக இம்முறை வவுனியாவிற்கு சென்றோம்.

கையில் நான்கு கேள்விகள். பிரியதர்சினி, டயாளினி, சாலினி, யதுஷா, வினோசியா என ஐந்து மாணவிகளிடம் விடயத்தை சொன்னதும், மறுபேச்சில்லாமல் 'நாங்கள் ரெடி... பள்ளிக்கூடத்தைபோல பிட் அடிச்சென்றாலும் டக்டக் என பதில் சொல்லுவம்' என ரெடியாகிவிட்டார்கள்.

பிரியதர்சினி 'கடுமையான கேள்வியெல்லாம் கேப்பினமோ' என மெதுமெதுவாக யதுஷாவின் காதுக்குள் முணுமுணுக்க, 'வகுப்பில் உங்கள் இமேஸ் டமேஜாகாது' என்ற உத்தரவாதம் வழங்கினோம். மெதுவாக முணுமுணுத்ததை எப்படி கண்டுபிடித்தோம் என்பதுதான் நான்கு பேரின் குழப்பமாக இருந்தது.

'நமக்கிருப்பது பாம்பு காது' என சொல்லி அவர்களை சமாளித்தோம். பரீட்சை என்றால் மாணவிகள் என்ன முணுமுணுப்பார்கள் என்பதெல்லாம் உலகமகா இரகசியமா என்ன!

**கேள்வி: இலங்கையில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?**
**விடை: 25**

***ஜி.பிரியதர்சினி:*** *பாடத்தில படிச்சிருக்கிறதால ஒரு குழப்பமுமில்லை. இருபத்தைஞ்சு.*

***இ.டயாளினி:*** *இந்த கேள்விக்கூட உங்களுக்குவிடை தெரியாதோ. சரி, நான் சொல்றத வடிவா கேட்டு நினைவில வைச்சிருங்கோ. யாராவது இப்பிடி கேட்டால் உடனே இருபத்தைஞ்சு என சொல்லுங்கோ. (கலாச்சிட்டாவாம்!)*

***சு.சாலினி:*** *பெரிய அணுகுண்டு ரகசியம் கேட்டதென்ற நினைப்பு. எங்கள பார்க்க ஒன்றுமே தெரியாத ஆட்கள் மாதிரியா இருக்கு. இருபத்தைஞ்சு (மூக்கின் மேல் கோபமென்கிறது இதைத்தானோ)*

***வி.யதுஷா:*** *வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு... (கைவிரல் மடக்கி ஒவ்வொன்றாக எண்ணுகிறார். நம்மிடமும் விரல் கடன் கேட்பாரோ!).. ஓ.. கண்டுபிடிச்சிட்டன். இருதபத்தைஞ்சுதானே!*

***செ.வினோசியா:*** *இருபத்தைஞ்சு. இப்படி கலாய்க்கிற கேள்வியை விட்டிட்டு, கொஞ்சம் கடுமையாகவும் கேட்கலாமாக்கும்.*

**கேள்வி: முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இல்லத்தின் பெயர் என்ன?**
**விடை: கால்டன் இல்லம்**

***ஜி.பிரியதர்சினி:*** *அலரிமாளிகை. ஐயையோ.. இல்லைஞ்தெரியயில்லையே. (மெதுவாக கேட்கிறார்) விடை சொல்லுங்கண்ணா... (ஓ.. இதுதான் 'பிட்' என்பதா?)*

***இ.டயாளினி:*** *அவர் தன்ர பெயரைத்தான் வைத்திருப்பார். இல்லை இல்லை.. பிள்ளைகளில் ஒருவரின் பெயர் அல்லது மனைவியின் பெயர் வைத்திருப்பார். நான் பாஸா?*

***சு.சாலினி:*** *மகிந்தவின் வீட்டுக்கு என்ன பெயர் என்பதை தெரிந்து வைத்திருக்கிறதால என்ன லாபம்? ஆளை விடுங்கப்பா.*

***வி.யதுஷா:*** *ஓ.. மஹிந்தவிற்கு வீடெல்லாம் இருக்குதா? இந்த தகவலே எனக்கு புதிசு. பெயரை நான் சரியா சென்னதாக நீங்களே போட்டு விடுங்கோ.*

***செ.வினோசியா:*** *பொலிற்றிக் என்றாலே நமக்கு பொய்சன் மாதிரி. எங்கட பாட சிலபஸில வாற சிம்பிளான கேள்வியள் கேட்பியள் என்றால் இப்பிடி அவுட் ஒப் சிலபஸ் கேள்வியள் கேட்கிறியள்.*

**கேள்வி: தற்போதைய பாப்பரசரின் பெயர் என்ன?**
**விடை: பிரான்சிஸ்**

***ஜி.பிரியதர்சினி:*** *எங்கட ஊர் ஐயரின்ர பெயர்தான் தெரியும். அதைவிட வேறொன்றும் என்னைக் கேட்டு அவமானப்படுத்தாதீங்கப்பா.*

***இ.டயாளினி:*** *நீங்கள் கேட்கிற ஆள் எங்கட நாட்டுக்காரர் இல்லைப்போல இருக்கே. ஒரு நிமிசம் தந்தால், ரியூசன் மாஸ்ரரிட்ட போன் பண்ணி விடை கண்டுபிடிச்சிடுவன். (இது அளாப்பல் விளையாட்டு)*

***சு.சாலினி:*** *பெயரை எங்கேயோ கேள்விப்பட்டிருக்கிறன். ஆனால் இப்ப வருதில்லையே... (எல்லா பரீட்சையிலும் இப்படியா)*

***வி.யதுஷா:*** *மிஸ்ரர் பாப்பரசர். சரியா நான் சொன்னது? இதுதானே பெயர். (ஆரம்பத்திலயிருந்து பார்க்கிறம்.. 'டெரராக்த்தான் இந்த பிள்ளை பேசுது)*

***செ.வினோசியா:*** *என்னப்பா இப்பிடி பண்றீங்களே? தெரிந்த கேள்வியள் கேட்டால் டான் என பதில் வரும். அதைவிட்டிட்டு இப்பிடி கேட்டால்... பாப்பரசர் என்றால் யார்? அமெரிக்கா ஜனாதிபதியா?*

**கேள்வி: இலங்கையின் தேசிய பறவை எது?**
**விடை: காட்டுக்கோழி**

***ஜி.பிரியதர்சினி:*** *தீக்கோழிஞ்சொறி சொறி... காட்டுக்கோழி. நாங்கள் எல்லாம் சொல்லுவமில்ல... இப்பிடி கேள்வியளை விட்டிட்டு சும்மா பாப்பரசர் அது இதென்று...*

***இ.டயாளினி:*** *காட்டுக்கோழி.*

***சு.சாலினி:*** *காட்டுசேவல்தான். (சந்தேகமாக பார்க்கிறார்) நீங்கள் பார்க்கிறதை பார்த்தால் பிழைபோலிருக்கே... ஐயையோ... எங்கட நாட்டு தேசிய பறவையை தெரியாட்டில் அவமானம். நான் பிழையா சொன்னால் சரியான விடையை எழுதிவிடுங்கோ.*

***வி.யதுஷா:*** *காட்டுக்கோழியென்றுதான் எல்லாரும் சொல்றாங்க. அதால அந்த விடையை எழுதிவிடுங்கோ. ஆனால் வீட்டுக்கோழியைத்தான் பார்த்திருக்கிறன். இந்த காட்டுக்கோழியை எங்க பார்க்கலாம் ( அட... பிறகும் பார்)*

***செ.வினோசியா:*** *காட்டுக்கோழி. நாங்கள் எல்லாம் யாரு பாஸ்.*


வி.யதுஷா


செ.வினோசியா

# நாலுந் தெரிந்த றூட்டுக்காரர்கள்!





பாட்ஷா ஸ்ரைலில் ஓட்டோ ஓட்டும் ஆண்கள் நம்மத்தியில் சர்வசாதாரணம். இன்றும் பிரவசத்திற்கு இலவசம் என்ற வாசகத்தை ஓட்டோக்களில் ஒட்டித்தான் வைத்துள்ளனர். இரண்டு சில்லில் ஓடுபவர்கள், 'சடன்' பிரேக் போட்டு மறுபக்கம் திரும்பி நிற்பவர்கள் என ஏராளம் 'வித்தை'காரர்களும் உள்ளனர்.

ஆண்கள் கோலோச்சும் இந்த தொழிலில் சில பெண்களும் சத்தமில்லாமல் சவாரி விடுகிறார்கள். முன்னர் 'ஒருகாலத்தில்' பெண்கள் வாகனம் ஓடியதெல்லாம் சர்வசாதாரண நிகழ்வுகள். இப்பொழுது மீண்டும் பெண்கள் 'காட்சிப்பதுமைகள்' பாத்திரம் மட்டும்தான் வகிக்க முடிகிறது.

இப்படியானவர்கள் மத்தியிலிருந்து புறப்பட்ட தன்னம்பிக்கைப் பெண்கள் சிலருக்காகவே யாழ்ப்பாண பேரூந்து நிலையத்தில் ஒரு ஓட்டோ தரிப்பிடம் உள்ளது. தனியார் பேரூந்துகளின் தரிப்பிடத்தில் உள்ள அந்த தரிப்பிடத்தில் இரண்டு பெண்கள் ஓட்டோக்களுடன் நிற்கிறார்கள்.

இந்த தரிப்பிடத்தில் அவர்கள் நிறை சிரமங்களை சந்திப்பதாக கூறுகிறார்கள். குறிப்பா தனியார் பேரூந்துகள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பனவும் இதில்த்தான் நிறுத்தப்படுகின்றன. அத்துடன் அவ்விடத்தில் குப்பைகளும் கொட்டப்படுகின்றன. அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சனையாக இதனை கூறுகிறார்கள்.

மனிதஉரிமை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் பெண்கள் ஓட்டோ ஓடுவதற்கு பிள்ளையார்சுழி போட்டுள்ளது. நாற்பது பெண்களை தேர்வு செய்து ஓட்டோ சாரதிப்பயிற்சி வழங்கியுள்ளனர். இவர்களில் முப்பது பெண்கள் பாதியிலேயே விலகிச் சென்றுவிட்டனர். பயிற்சிநெறியை பூர்த்தி செய்த பத்துப்பேரில், இருவர் இந்த தரிப்பிடத்தில் நிற்கிறார்கள்.

பெண்கள் தொடர்பாக இறுக்கமான பார்வையை கொண்ட நமது சமூகத்தில் பெண்கள் ஓட்டோ ஓட்டுவது சாதாரண விடயமல்ல. நிறைய சவால்களை சந்தித்தே இன்றும் ஓட்டோ ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத்துறையில் எப்படி சமாளிப்பதென்ற பயம் இருவருக்குமே இருந்துள்ளது. அத்துடன், ஓட்டோவுடன் களமிறங்கியதும் 'பெண்கள் வாகனம் ஓடலாமா' என்ற முகச்சுளிப்புக்களும் தாராளமாக நடந்துள்ளன.

'பெண்கள் நகரத்தில் நின்று எப்படி ஓட்டோ ஓடுவது, ஆட்களை ஏற்றித்திரிய முடியுமா என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பலர் கதைத்தார்கள். ஆனால் நான் அதையெல்லாம் கணக்கெடுக்கவில்லை. அதனால்த்தான் நான்கு வருடங்கள் கடந்தும் இப்பொழுதும் அந்த தொழிலில் இருக்கிறேன்' என்கிறார் கோமலேஸ்வரி.

காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரை இந்த தரிப்பிடத்தில் ஓட்டோக்கள் இரண்டும் நிற்கும். வாடிக்கையாளர்கள் ஏதாவது ஆபத்து, அவசரம் என்று மற்ற நேரம் கூப்பிட்டாலும் போவதற்கு தயாராக இருக்கிறோம் என்கிறார்கள், நல்லா ஓடும்... நாலும் தெரிஞ்ச றூட்டுக்காரர்கள்!

**கோமலேஸ்வரி**

எனக்கு ஐந்து பிள்ளைகள். கணவருக்கு வேலையில்லாத நாட்களில் இந்த ஓட்டோதான் குடும்பத்திற்கு சோறு போட்டது. நாளாந்தம் 1500 2000 ரூபா வரை வருமானமாக கிடைக்கிறது.

சமூகத்தில் சிலர் வீணாண கதைகளை கிளப்பும்போதும் ஆண் ஓட்டோக்காரர்கள் எங்களிற்கு ஆதரவாக இருக்கிறார்கள். வழியில் எங்காவது காற்றுப்போய் நின்றால் வீல் கூட மாற்றித்தருவார்கள்.

எங்களிற்குள்ள ஒரே சவால் மக்களின் மனநிலைதான். நாங்கள் சரியாக செலுத்த மாட்டோம் என ஏற தயங்குபவர்களும் உள்ளனர். இந்த தயக்கம் எமக்கு பாதிப்புத்தான். கொஞ்சகாலம் போல சரியாகிவிடும்.







இலங்கையில் முதல் முறையாக தமிழ்மொழி மூல மருந்தக கலவையாளர் பயிற்சி நெறியை முடித்து வெளியான 34 மருந்தக கலவையாளர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் திருகோணமலை முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.





உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மண்முனை வடக்கு மத்திய நிலையம் நாடத்தும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நடனம், சங்கீதம், நாடகம், சிங்களம், ஆங்கிலம் மற்றும் யோகா கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## சேலையில் சேனா!

சோனா என்றால் கவர்ச்சி வெடிகுண்டு என்றுதான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். தமிழில் கவர்ச்சி வெடிகுண்டாகவும், நகைச்சுவை நடிகர்களின் ஜோடியாகவும் நடித்தார். இந்தநிலையில் சோனாவிற்குள் ஒளிந்திருந்த நடிகையை தட்டியெழுப்பியுள்ளது மலையாள திரையுலகம். அண்மையில் வெளியான இரண்டு படங்களிலும் அவரது நடிப்பை பலரும் பாராட்டியுள்ளனராம். இதை தொடர்ந்து குணசித்திர வேடங்களில் நடிப்பதென முடிவு செய்துள்ளாராம்.



## பிழைக்கத் தெரிந்த நடிகைகள்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒவ்வொரு நாயகி அறிமகமாகவது தமிழ் சினிமாக வழக்கம். அவ்வளவு நாயகிகள். அவர்களில் தேறுவதென்னவோ ஒரு சிலர்தான். சிலர் சிறிது காலம் தாக்குப்பிடிப்பார்கள். மின்மினி வாழ்க்கைதான் நாயகி வாழ்க்கை. இதை நன்றாகவே தெரிந்து வைத்துள்ள நாயகிகள் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்கிறார்கள். உழைக்கும் பணத்தை வேறு தொழில் முதலிட்டு விடுகிறார்கள் சில கெட்டிக்கார நடிகைகள். அப்படியான சில நடிகைகளின் பட்டியலிது.

நம்பர் 1 நயன்தாரா ஒரு படத்திற்கு கிட்டத்தட்ட 3 கோடி வரை வாங்குகிறார். இந்தப்பணத்தை ரியல் எஸ்டேடில் முதலிடுகிறார். த்ரிஷாவும் அதே தொழில்தான். தமன்னா தங்கநகை வியாபாரம் செய்கிறார். புதுபுது டிசைனகளில் உருவாக்கி இணையத்தளங்கள் மூலம் விற்கிறார்.

நமீதா கட்டுமானத் தொழில் செய்கிறார். சொந்த ஊரான சூரத்தில் பல அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டி விற்கிறார். சமந்தா ஐதராபாத், சென்னையிலும், அனுஷ்கா பெங்களூரிலும் ரியல் எஸ்டேடில் முதலிட்டுள்ளனர். காஜலும் இதேதுறைதான்.

டாப்சி திருமணங்கள் நடத்திக் கொடுக்கும் நிறுவனம் நடத்துகிறார். பிரணிதா ஹோட்டல் தொழிலில் குதித்துள்ளார். சிம்ரன் தொலைக்காட்சி தொடர்கள் தயாரிப்பிலும், குஷ்பூ திரைப்படங்கள் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.



## தமன்னா காதலிக்கவில்லையாம்!

இதுவரை தான் யாரையும் காதலித்ததில்லையென கற்பூரம் அடித்து சத்தியம் செய்யாத குறையாக சொல்கிறார் தமன்னா. தமன்னாவின் பதற்றத்திற்கு காரணம், இந்தி இயக்குனர் சாஜித் கானும் அவரும் காதலிப்பதாகவும், விரைவில் திருமணம் செய்யப் போவதாகவும் கிளம்பிய வதந்திதான். சாஜித்தின் இரண்டு படங்களில் நடித்ததாலும், படப்பிடிப்பில் தன்னை அவர் கவனமாக பார்த்துக் கொண்டதாலுமே இப்படி கதை பரவியுள்ளதென்றும், இப்படியான கதைகளை நம்பாதீர்கள் என்றும் கூறியுள்ளார்.

# டூரிங் டாக்கீஸ்



## மிரட்ட விரும்பும் நிஷா!

சின்னத்திரை வில்லியாக புகழ் பெற்றவர் நிஷா. வைராக்கியம், அழகி, கஸ்தூரியை தொடர்ந்து தெய்வம் தந்த வீடு தொடரில் தற்போது மிரட்டிக் கொண்டிருக்கிறார். நிஷாவின் கனவெல்லாம் சீரியலை போல சினிமாவிலும் ஒரு ரவுண்ட் வர வேண்டுமென்பதே. வில்லியாக அறிமுகமான பின்னர் பொதுஇடங்களில் பலர் தன்னைப்பார்த்து முணுமுணுப்பதாகவும், அது பற்றி கவலைப்படுவதில்லையென்றும் கூறியிருக்கிறார்.



## தாதியாகும் சிவகார்த்திகேயன்!

அடுத்த பட தலைப்பை தனது பிறந்ததினத்தில் அறிவித்துள்ளார் சிவகார்த்திகேயன். 'ரெமோ' தலைப்பு. விக்ரமின் 'அந்நியன்' பட பாத்திரம். இசை வழக்கம் போல அனிருத். சிவகார்த்திகேயன் ராசிப்படி ஒரே நாயகிதான். இதிலும் கீர்த்தி சுரேஷ்தான். இந்த படத்தில் பல வேடங்களில் சிவகார்த்திகேயன் நடிக்கிறாராம். அதில் ஒரு வேடம் பெண் தாதியாம். சிவகார்த்திகேயன் படங்கள் என்றால் பொழுதுபோக்கிற்கு உத்தரவாதமுள்ள நிலையில் பெண் தாதி வேடமும் கலக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆதிவாசி ஆர்யா!

எத்தனை நாளைக்குத்தான் ரொமான்டிக் ஹீரோவாகவே நடிப்பார் ஆர்யா?. அப்படி நடிப்பதில் அவரே சலித்துப் போனார். திரைக்கு வந்து பத்து வருடமாயிற்று. இனினும் ப்ளேபோய் படங்களில் நடிக்க முடியாது. நல்ல கதைகளை, வேடங்களை தேர்வு செய்து நடிக்கப் போகிறேன் என அறிவித்து அவர் தேர்வு செய்துள்ளது ஆதிவாசி வேடம். மஞ் சப்பை ராகவன் இயக்கும் இந்தப்படத்தில் ஆதிவாசியாகவே மாறப் போகிறேன் என்றுள்ளார் ஆர்யா.

## கவர்ச்சி மிரட்டல்

லட்சுமி ராய் கவர்ச்சி வேடத்தில் நடிக்கிறார் என்றால் அது செய்தியே அல்ல. அவர் திரையில் தாராளம் மட்டும்தான் காட்டுகிறார். ஆனால் இப்பொழுது தலைப்பு செய்தியாகியுள்ளார். என்னதான் கவர்ச்சி வேடமிட்டாலும் இதுவரை அம்மணி நீச்சலுடை காட்சிகளில் தோன்றியதில்லை. அந்த குறையையும் இந்திப்படமொன்றில் போக்குகிறாராம். 'நீச்சலுடை காட்சியில் தோன்றும்போது கொஞ்சம் கூட குண்டாக தெரியக்கூடாது. அதனால் நிறைய பயிற்சி செய்து கச்சிதமான தோற்றத்தை பெற்றிருக்கிறேன்' என படத்திற்கு இலவச விளம்பரம் வேறு செய்திருக்கிறார்.



## ஒருதலையாக காதலிக்கும் சுனைனா!

'காதலில் விழுந்தேன்' சுனைனாவிற்கு தமிழில் அவ்வளவான மார்க்கெட் இல்லை. ஏதோ நடித்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது 'கவலை வேண்டாம்' படத்தில் நடிக்கிறார். இதில் சுனைனா தவிர காஜல் அகர்வாலும் உள்ளார். தற்போதைய நவீன காலத்தில் உள்ள அப்பாவிப் பெண்ணாக சுனைனா நடிக்கிறாராம். சுனைனா ஒருதலையாக ஜீவாவை காதலிப்பதாகவும், அதிலிருந்து தப்பித்து மொடர்ன் பெண்ணான காஜலை அவர் காதலிப்பதுதானாம் கதை.

# கப்டன் திஸ்ஸ
## மகிந்தவின் வலது கை?



ஊடகவியலாளர் லசந்தவிக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் என பொலிஸ் திணைக்களம் இருவரின் படங்களை வெளியிட்டிருந்தது. அந்த இரண்டு படங்களில் ஒன்று மஹிந்த குடும்பத்துடன் நெருக்கமாக இருந்த கப்டன் திஸ்ஸ என சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவியிருந்தன. இது தவிர தாஜுதீன் கொலையுடன் தொடர்புடையவரும் இவரென பரவலாக கூறப்படுகிறது.

கப்டன் திஸ்ஸ யார்? அவருக்கு மஹிந்த குடுப்பத்துக்குமான தொடர்பு என்ன? திஸ்ஸவின் செல்வாக்கு என்ன? என்னஎன்ன சம்பவங்கள் நிகழ்ந்தன என்பது பற்றிய எக்ஸ்ரே பார்வை.

கப்டன் திஸ்ஸவின் முழுப்பெயர் எச்.எம். திஸ்ஸ விமலரத்ன. மாத்தளை, லக்கல, வில்கமுவ, நுககொல்லையில் பிறந்தார். தந்தையார் விமலரத்ன பெருந்தெருக்கள் திணைக்களத்தில் சாரதியாகக் கடமையாற்றியவர்.

லக்கலவை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மொண்டி கொபல்லாவின் சாரதியாக கடமையாற்றிய திஸ்ஸ, அதனூடாகவே ம்ஹிந்த குடும்பத்தினரை நெருங்கியதாக ஊடகத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கை இராணுவத்தின் கடைநிலை ஊழியராக திஸ்ஸ இணைந்திருந்த சமயத்தில், கட்சிக்குள் நடந்த சில திறைமறைவு இரகசியங்களை அறிந்து கொண்டிருக்கிறார். உடனே அதனை மஹிந்த ராஜபக்ஷவுக்கு எத்திவைத்துள்ளார். திஸ்ஸவின் விசுவாசம் மகிந்தவிற்கும் பிடித்துப்போய்விட்டது. அதன் பின்னர் நிகழ்ந்ததெல்லாம் திஸ்ஸவிற்கு சாதகமானதுதான்.

தங்கல்லையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் மஹிந்தவைக் காப்பாற்றுவதற்காக உயிரை பொருட்படுத்தாமல் களத்தில் இறங்கியுள்ளார். அதன் பின்னர் திஸ்ஸவில் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளார் மகிந்த. அந்த நம்பிக்கை, திஸ்ஸவை மகிந்த குடும்பத்திற்கு நெருக்கமாக மாற்றியுள்ளது. மகிந்தவின் மாளிகைகளிற்குள் அதிகஅதிகாரம் படைத்தவராக திஸ்ஸ வலம் வரத் தொடங்கியுள்ளார். என்னவென்றாலும் கண்ணைமூடிக்கொண்டு செய்து முடிக்கும் திஸ்ஸவின் தனிக்குணம் மகிந்தவின் மகன்களிற்கும் பிடித்துப்போய் விட்டது.

மகிந்தவின் காலத்தில் திஸ்ஸ எவ்வளவு செல்வாக்குடன் இருந்தார் என்பதை அறிய இது ஒன்றே போதும். ஏதாவது காரணத்திற்காக அமைச்சர்கள், எம்.பிக்கை மகிந்த திட்டிவிட்டார். அவர்கள் மகிந்தவை சமரசப்படுத்த வேண்டும். ஒன்றுக்கும் யோசிக்காமல் திஸ்ஸவிற்கு போன் போடுவார்கள். மகிந்தவிடமிருந்து ஏதாவது காரியமாக வேண்டுமென்றாலும் அவர்கள் உடனே திஸ்ஸவிடம்தான் ஓடுவார்கள்.

திஸ்ஸவின் கிராமம் அவ்வளவு நவீனமடையாதது.என்றாலும்திஸ்ஸவின் வீட்டுக்கு செல்வது நவீன காப்பெற் வீதி. திஸ்ஸவின் திருமணத்திற்காக வெறும் நாலுநாட்களில் அமைக்கப்பட்ட வீதி என்கிறார்கள். சில தனியார்காணிகளையும் சுவீகரித்து, மகிந்தவின் நேரடி கண்காணிப்பில் அந்தவீதி உருவானது. திஸ்ஸவிற்கு திருமணம் என்றதும் மகிந்த கொடுத்த திருமணப்பரிசுகளில் ஒன்று அது. பின்னர், திஸ்ஸ வீட்டிற்கு நேரிலும் சென்று மணமக்களை வாழ்த்தியிருந்தார்.

நுககொல்ல மகாவித்தியால கட்டட திறப்பு விழாவிற்கு சென்ற மகிந்த ராஜபக்ச, திஸ்ஸ வீட்டிலேயே அன்றைய மதியபோசனத்தை எடுத்திருந்தார்.

இவ்வளவு செல்வாக்குள்ள திஸ்ஸ காசு பண்ணியிருக்க மாட்டாரா? அதுபற்றியும் ஊடகத்தகவல்கள் உள்ளன. மகிந்த ஆட்சியில்தெற்கு அதிவேகவீதியில் அனுமதிப்பத்திரமின்றி தனக்குசொந்தமான தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தினார் என்கிறார்கள். திஸ்ஸவிடம் ஆறு பஸ்கள் நின்றனவாம். இதைவிட, கதிர்காமத்தில் நட்சத்திர சுற்றுலா விடுதியொன்றையும் அவர் நடத்தி வருகிறார். திஸ்ஸவின் பிரதான காரியாலயமும் அந்த விடுதிதானாம்.

அத்துடன் களனி, மாகொல, அவிஸ்ஸாவெல்ல மற்றும் மகரகம போன்ற பிரதேசங்களில் திஸ்ஸவுக்கு சொந்தமான பெறுமதி வாய்ந்த வீடுகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இவருக்கு ராஜகிரியவில் பல மில்லியன் பெறுமதியான வீடு இருப்பதாக மஹிந்தவின் முன்னாள் ஜோதிடர் சுமனதாச கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தின் கடைநிலை ஊழியரான திஸ்ஸ விமலரத்னவை கப்டனாக தரமுயர்த்தியமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரது சம்பளத்தை மிகையாக உயர்த்தியமை என்பவற்றின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி, அவரது குடும்பத்தினர் உள்ளதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பிரதானி உட்பட்ட சர்ச்சைக்குரிய சிலரோடு மட்டுமே நெருங்கிப் பழகியிருந்த திஸ்ஸ, மஹிந்த குடும்பத்தின் அலுகோசு என வர்ணிக்கப்படுபவர் என்றும் ஊடகங்களில் தகவல்கள் வந்தமை குறிப்பிடத்தக்கது.










பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் மஹாமக திருநாளை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி உப்போடை, நொச்சிமுனை, நாவுக்குடா ஆகிய பிரதேசங்ககளில் உள்ள வினாயகர் ஆலயங்களின் சார்பாக பக்தர்களின் பவனியாக சென்றனர்.

உகண்டாவின் உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திய பெரும் கொடூரம் குழந்தைப் போராளிகள். பிஞ்சுகளின் கைகளில் உயிர்கொல்லும் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு, களங்களிற்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் ஒருவரே சைனா கெய்ரெற்சி. தனது 8 வது வயதில் அங்குள்ள ஆயுதக்குழு ஒன்றினால் படைக்கிணைக்கப்படு, 19வது வயதில் அங்கிருந்து தப்பிச் செல்கிறார். அந்த அமைப்பின் புலனாய்வு பிரிவு பலநாடுநாடாக அவரை துரத்தியது. இறுதியில் தென்னாபிரிக்காவின் சந்தடிமிக்க தெருவில் கடத்தி கொடூர சித்திரவதை செய்தது. அதிலிருந்தெல்லாம் தப்பி டென்மார்க்கில் தஞ்சம் புகுகிறார். பின்னர் ஐநாவின் குழந்தைப்போராளிகளிற்கு எதிரான செயற்திட்டத்தில் இணைந்து பல பணிகள் செய்தார். ஒரு திகில் கதைக்கு தேவையான அத்தனை பரபரப்பு விடயங்களுடனும் கெய்ரெற்சி எழுதியதுதான் குழந்தைப்போராளிகள் நாவல். அவர்கள் என்னிடமிருந்து அம்மாவை பறித்துக் கொண்டு துப்பாக்கியை தந்தார்கள் என்ற வார்த்தைகள் எவ்வளவு துயரமானது.

சைனா கெய்றெற்சியின் கதை நமது இளையவர்களின் கதையென்பது ஒரு விசித்திர ஒற்றுமை.




# ஞாபகங்களின் தடங்களில்




சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

இன்றுஇருபத்தைந்துவயதுப்பெண்ணான உலகின் ஒரு மூலையில் நான் பத்திரமாக வாழ்வதையும் இன்று இந்த புத்தகத்தை எழுதி முடித்திருப்பதையும் என்னால் நம்பவே முடியாமல் இருக்கிறது. எனது குழந்தைப் பருவத்தைப் பற்றி கதைப்பதிலும் நினைவுகளை கோர்வைப்படுத்தி மீண்டும் ஒரு முறை அவ் வாழ்க்கையை ஞாபகங்களில் மீளக் கட்டி எழுப்புவதிலும் நான் விருப்பம் இன்றித்தான் ஈடுபட வேண்டியுள்ளது. நினைவுகளைக் கட்டி நிறுத்துவதும் மீளப்பிடிக்குள் கொண்டுவருவதும் சந்தேகம் இன்றிக் கடினமானதே. நினைவுகள் நாம் எதிர்பாராத வேளைகளில் மனதில் எழுவதாலும், வீழ்வதாலும் ஓடும் மின்னலைக்கை கொண்டு பிடிப்பதற்கு இது ஒப்பானது. நினைவுகள் கனவுகளைப் போன்றவை தமக்கொரு பிரத்தியேக விதியில் இயங்குபவை.

எனது முந்திய வாழ்க்கை ஒரு போராளிச் சிறுமியாக பல தடங்கல்களில் சென்றுள்ளது. அவைகளின் ஊடே நான் மீண்டும் கால்பதித்தாக வேண்டும். ஆனாலும் என்னுள் இருக்கும் சிறுமி அப்பாதையினை மீண்டும் பார்ப்பதற்கு முரண்டுபிடித்தும், அழுதும் தனது எதிர்பார்ப்பை தெரிவித்தாள் அந்த வாழ்க்கையை திரும்ப சந்திக்க அவள் விரும்பவில்லை. அது அவளைப் பொறுத்தவரை ஒரு கெட்ட கனவு.



இன்று கூட தாயின்றி வளர்ந்த கொடுமையை ஈடுசெய்ய முடியாத அந்த இழப்பின் துயரமும் எப்போதும் என்னைத் துன்புறுத்துகின்றது. அன்று நான் மிக சிறியவளாக இருந்ததால் தாய் இன்றி வளர வேண்டி இருந்த நிலையின் அவலப் பரிமாணத்தை என்னால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த இழப்பின் துயர் என்னைத் துரத்திக் கொண்டே இருக்கின்றது. துயரும், கையறு நிலையும் என்னைத் தாக்கி நிலைகுலையச் செய்துவிடுகின்றன. பொதுவாக இந்த எண்ணங்களை தள்ளி வைக்கவே விரும்புகின்றேன். அல்லது மறந்து விட முயற்சிக்கின்றேன். எனெனில் மறதியே எனக்கு அமைதியைக் கொடுக்கின்றது.

ஒரு சிறுமியாக எனது கனவு எதுவாக இருக்கும்ஞ்?, என்போன்ற மற்றைய சிறுமிகளின் கனவு எதுவாய் இருக்கும். அன்புக்கும், அரவணைப்புக்கும் ஏங்குவதாகவே இருக்கும் என நான் நம்புகின்றேன். எனது தந்தையின் கனவோ அதிகாரமும், பெரிய மனிதனாவதும் மட்டுமே. ஒரு வெறிப்பிடித்த அரசியல் வாதியின் கனவது. தனது அதிகாரத்துக்கும் புகழுக்கும் இடையில் எதுமே தடையாக இருக்கக் கூடாது என்று அவரின் கனவுகளின் கைதியாக நானிருந்தேன். அடி உதைகளில் இருந்தும், எல்லாத்தவறுகளினதும் காரணி நான் தான் என்று தவறான வாததிலிருந்து நான் தப்பியோடி விளையாடிய மற்றிய விளையாட்டுத்தான் ஆயுதமேந்திய விளையாட்டு. இவர்களின் கனவால் என்னிடமிருந்து நானே தப்பியோட வேண்டி நிலைக்கு காலம் என்னைத் தள்ளியது. இவர்களின் கனவு எனது வாழ்கையின் அதிபயங்கர கனவாக மாறியது.

இன்று எனது கனவென்ன, எனது வாழ்க்கைப் பாதையை நாமே தேர்ந்தெடுக்கும் சுதந்திரம். அச்சத்திலிருந்தும் விடுதலை, நிபந்தனையற்ற அன்பும், நேசமும் இந்தக் கனவுகளை எட்ட நான் எவ்வளவு தூரம் ஓட வேண்டி இரக்கும் என்பதை நீங்களும் அறிந்து கொள்ள வேண்டும். இன்று எனது வாழ்வை எனது கையில் எடுத்துக்கொள்ள என்னால் முடிகின்றது. ஆனாலும் எனது கடந்தகாலத்தை எண்ணும் போதெல்லாம் ஆழம் தெரியாத இருண்ட படு குழியில் நான் விழுந்து விடுகின்றேன். என் கடந்தகால வாழ்வின் நியாபகங்களில் பெரும்பாலானவை பயங்கரமானவை. அவை எனது ஆன்மாவில் கீறிய உதிரம் வழியும் சித்திரங்களும், நான் எனது தாயைப்பிரிந்த துயரமும், என்னை விட்டு என்றும் அகலாதவை. காயங்கள் மிக ஆழமானவை. கடந்த காலம் பல தழும்புகளை என்னில் விட்டு சென்றுள்ளதால் நினைவுகளை கழுவி விட என்னால் முடியாது இருக்கின்றது.

(தொடரும்)





# ‘காளி’க்கு வந்த சோதனை

தலிப் சிங் ராணாவை பலருக்கு தெரிந்திருக்காது. ஆனால் ‘த கிரேட் காளி’ என்றால் சின்னக்குழந்தைகூட சொல்லும். கீகீணி இல் நல்லு{ர்கோயில் தேர்போல ஆடிஆடிவரும் மாமிசமலை அவ்வளவு பரிச்சயம். ‘த கிரேட் காளி’ என்பதை கீகீணி இற்காக மட்டும் வைத்துள்ளார். அவரது நிஜப்பெயர்தான் தலிப் சிங் ராணா. தற்போது 44 வயதாகிறது. அண்மையில் நடந்த காட்சிப்போட்டியொன்றில் தலை உடைந்து இரத்தம் சொட்டசொட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்..

உத்தரகாண்ட் மாநிலம் ஹால்ட்வானியில் கடந்த புதன்கிழமை இரவு கீகீணி பொழுதுபோக்குக்கான மல்யுத்த போட்டியை நடத்தினார்.

வெளிநாட்டைச் சேர்ந்த மூன்று வீரர்களுடன் மோதினார். போட்டியின் ஒரு பகுதியாக அவரை கதிரைகள் கொண்டு தாக்கிய போது எதிர்பாராத விதமாக மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது. இதையடுத்து அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்கு பிறகு அவர் வீடு திரும்பினார்.








# 'மீண்டும் இளமைக்கு திரும்புகிறோம்'

## 'தம்ஸ்'கட்டும் யாழ்ப்பாண யோகாராணிகள்

பி.சியா
siya@deepam.lk

வாழ்க்கைமுறை, உணவுப்பழக்கவழக்கங்களில் மாற்றம், பணி நெருக்கடி, ஓய்வில்லாத உழைப்பு என எல்லாமும் சேர்ந்து மனிதர்களை பல்வேறு நெருக்கடிகளிற்கு ஆளாக்கிவிட்டுள்ளது. இதிலிருந்து தப்பிக்க யோகா, தியானம் முதலானவற்றின் பக்கம் ஈடுபாடு காட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதிலும் உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆரோக்கியம் தரும் யோகாசனத்திற்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறது.

யாழ்ப்பாணத்தில் பெருமளவானவர்கள் கூடும் யோகா பயிற்சி நிலையமொன்றிற்கு சென்றோம். நல்லூர் ஆலயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் யாழ் யோகா அரங்கம் இயங்கிவருகிறது. இங்கு தினமும் காலை தொடக்கம் மாலைவரை யோகா வகுப்புக்கள் நடக்கின்றன. ஆண்கள், பெண்கள் வயது வேறுபாடின்றி வருகின்றனர்.

வசதி படைத்தவர்களிடம் சிறிய கட்டணம் அறவிட்டாலும் கட்டணம் குறித்த கட்டுப்பாடுகள் அங்கு கிடையாது. பணம் செலுத்த வசதியில்லாதவர்கள் இலவசமாகவே கற்றுக்கொள்ள முடியும்.

30 நாள் பயிற்சிநெறி வழங்கப்படுகிறது. 2009 ஆம் ஆண்டிலிருந்து இங்கு யோகா பயிற்சிகள் வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது. உமாசுதன் பயிற்சிகளை வழங்குகிறார். யுத்தநெருக்குவாரம், இயந்திரவாழ்க்கை என்பனதான் மக்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் என்கிறார் ஆசிரியர் உமாசுதன். தன்னிடம் யோகா கற்க வருபவர்களில் அதிகமானவர்கள் உடல் எடை குறைக்க அல்லது மனஅமைதியை விரும்புபவர்கள்தான் என்கிறார்.

'எனது மகன் பொறியில் படிக்கிறார். அவருக்கு நினைவாற்றல், மனஅமைதி அதிகம் தேவை என யோகாவிற்கு கூட்டி வரத் தொடங்கினேன். இப்பொழுது நானும் ஒரு யோகா மாணவி' என தம்ஸ் கட்டி சிரிக்கிறார் ஜெயமலர் சச்சிதானந்தம். நாரிப்பிடிப்பு, கால்ப்பிடிப்புடன் இத்தனை நாளும் மல்லுக்கட்டியதாகவும், இப்பொழுது எல்லாம் பறந்துவிட்டன என்கிறார்.

நீரிழிவு, உயர்குரதி அமுக்கம், முட்டு, மனஉளைச்சல் போன்றவற்றிற்கு சிறந்த தீர்வை யோகாசனப்பயிற்சி மூலம் பெறலாமென கூறும் உமாசுதன், மருத்துவர்கள் மற்றும் யோகாசன நிபுணர்களால் ஒவ்வொருவருக்கும் ஏற்றவை என சிபாரிசு செய்யப்பட்ட ஆசனங்களை மட்டுமே கற்றுக் கொடுப்பதாக கூறுகிறார். விடுமுறை நாளென்று எதுவுமில்லாமல், அனைத்து நாட்களும் வகுப்புக்கள் நடக்கின்றன.

இங்கு நிறையப்பேர் யோகா கற்றுக்கொள்கிறார்கள் என்றபோதும், அது சமூகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு தரப்பினர் மட்டுமே. மத்தியதர அல்லது கல்விகற்றவர்கள்தான் பெரும்பாலானவர்கள் வருகிறார்கள். சமூகத்தின் எல்லா மட்டங்களிற்கும் யோகா பரவவில்லையென்பது தெரிகிறது.

யோகா தொடர்பான முழுமையான விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டுமென ஆசிரியர் உமாசுதனும் குறிப்பிட்டார். மனிதனின் சீரான இயக்கம், மாணவர்களின் சிறப்பான கல்வி என்பவற்றிற்கு யோகா காரணமாகும் என்கிறார். பாதிப்புக்களிற்கு நிவாரணமளிக்கவே யோகா என்பதை போன்ற தவறான அபிப்பிராயம் உள்ளது. ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப யோகா அவசியம் என்ற விழிப்புணர்வு அவசியம் என்கிறார் உமாசுதன்.

பெரும்பாலான பெண்களை போல ஆரம்பத்தில் உடல்எடை குறைப்பிற்காகவே யோகாவிற்கு சென்றதாகவும், இப்பொழுது அதன் பலனை முழுமையாக அறிந்து வீட்டிற்கு அருகில் உள்ளவர்களிற்கு கற்றுக் கொடுக்கிறேன் என்கிறார் சிவரூபன் மலர்வதி. அவரது பேச்சிலும், செயலிலுமிருக்கும் குதூகலமும், துள்ளலும் நம்மையும் யோகா கற்றுக்கொள்ள வேண்டுமென தூண்டியது!




**க.ஜெயந்தி (60)**

**ஆ**ரம்பத்தில் மகளை யோகா வகுப்பிற்கு கூட்டி கொண்டு வருபவராகத்தான் இருந்தேன். இங்கு என் வயதுக்காரரெல்லாம் பயிற்சி பெறுவதை பார்த்த பிறகுதான் பயிற்சிபெறும் எண்ணம் வந்தது. இப்பொழுது காலையிலெழும்பி சூரிய நமஸ்காம் செய்யாவிட்டால் அன்றைய நாளே விடியாததை போலிருக்கும். எனக்கு நீரிழிவுஇ இரத்த அழுத்தம் உள்ளது. ஆனால் அவற்றை யோக மூலம் கட்டுப்படுத்த முடிகிறது.

**உமாசுதன்**
யோகா ஆசிரியர்

**யோ**கா என்பது ஒருநிலைப்படுத்தல். ஆரோக்கியமான மனித வாழ்க்கைக்கு அது அவசியம். இங்கு தினமும் வகுப்புக்கள் நடக்கின்றன. விடுமுறை என்று இல்லை. தினமும் செய்யும் போதுதான் பயன் முழுமையடையும். இடையிடையே மருத்துவ பரிசோதனைகளும் யோகா பற்றிய விழிப்புணர்வு மற்றும் விரிவுரைகளும் நடத்தப்படுகின்றது. ஆசிரியர்கள், மாணவர்களுடைய அரங்க நிகழ்வுகளும் நடத்தப்படுகிறது.

அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த முதலாவது அனைத்துலக சைவ மாநாட்டிலும் எமது யோகாசன நிகழ்வு அரங்கேற்றப்பட்டது பெருமையானது. இங்கு பெரும்பாலும் வயதானவர்கள்தான் வருகிறார்கள். அத்தோடு இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு யோகா ஆசிரிய ஆலோசகர் வி. சாந்தரூபன் அவர்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றார்.



**சிவரூபன் மலர்வதி (58)**

**இ**ங்கு வருவதற்கு முன்னர் என்னை ஒரு வயதானவராகத்தான் உணர்ந்தேன். முதமையை எல்லா விடயத்திலும் உணர்ந்தேன். ஆனால் இப்பொழுது நிறைய வயது குறைந்துவிட்டதை போலிருக்கிறது. யோகா நோய்களின் மருந்து மற்றும் சிறந்த கலை. கலைகளே உள்ளத்தின் ஆறுதல்தானே.

யோகா மூலம் அமைதி, ஆரோக்கியம் இவை இரண்டும் கண்டிப்பாக கிடைக்கும் என்பதை உணர்ந்துள்ளேன். இரத்தக்கொதிப்புஇ அதிககோபம்இ நீரிழிவின்இ மனக்குழப்பம்இ மறதிஇ படபடப்பு என்பன நீங்கும் என்பதை இரண்டு வருடம் யோகா கற்றதன் மூலம் உணர்ந்துள்ளேன்.









விமானப்படையின் வருடாந்த சைக்கிள் பயணம் 2016 கடந்த 25ம் திகதி ஆரம்பமானது. 178 கிலோமீற்றர் தூரத்தையுடைய முதலாவது சுற்றில் 185 வீரர்கள் பங்குபற்றினர்.

# இலங்கையில் தேங்காய்ப் பால்மா (Coconut Milk Powder) தேங்காய்க்கிறீம் கைத்தொழில்



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



**தேங்காய்ப் பால்மா:**

இலங்கையில் அதி உயர்ந்ததரத்தை கடைப் பிடித்து தயாரிக்கப்படும் தேங்காய்ப் பால் சுகாதார முறையில் விசிறும் தொழில் நுட்பத்தில் சிறு துணிக்கைகள் ஆக்கப்பட்டு தேங்காய்ப்பால்மா தயாரிக்கப்படும்.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் இக் கைத்தொழிலானது 1986ம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. 1990ம் ஆண்டில் உலகசந்தையில் அதியுயர்ந்த வரவேற்புடன் 375 மெட்ரிக் தொன்கள் ஏற்றமதி செய்யப் பட்டது. தற்போது இவ் உற்பத்திக்கு சந்தை அபிவிருத்தி ஏற்பட்டு கிட்டத்தட்ட வருடம் ஒன்றிற்கு 5000 மெட்ரிக் தொன் வரை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவ் உலர்த்தப் பட்ட தேங்காய் பால்மாவானது பாதுகாப் பான உறையில் அடைக்கப்பட்டு பைக்கற்றுக் களில் பொதி செய்யப்பட்டு காணப்படும். இவற்றின் பாவனைக் காலம் ஒரு வருடத்திற்கு மேலாகும். இப் பொருளின் உற்பத்தியின் போது பெறப்படும் இடைநிலைப் பொருளான கொழுப்பகற்றப்பட்ட உலர்த்திய தேங்கா யானது வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் பட்டு அந்நியச் செலவாணியைப் பெற்றுத் தருகின்றது.

**தேங்காய்ப் பால் மாஉற்பத்தி செய்யப்படும் முறை:**

- பதனிடப்பட்ட தேங்காயானது உரிமட்டை அகற்றப்பட்டு தேங்காய்க் கிறீம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படும்.
- முளைத்த, அழுகிய, வெற்று மற்றும் உடைந்த தேங்காய்கள் அகற்றப்பட்டு அதன் பின் தேங்காய் சிரட்டையையும் கபில நிற வித்துறையும் அகற்றப்பட்டு வெள்ளைநிறத் தேங்காய் பருப்பானது துண்டுதுண்டாக்கப்படும்.
- அத் தேங்காய்த் துண்டுகளானது குளோரின் இடப்பட்ட நீரில் கழுவி $98^{0C}$ இல் கிருமி அழிக்காப்பட்டு சிறு துண்டுகளாக்கும் இயந்திரத்திற்கு அனுப்பப்படும்.
- கிடைக்கப் பெறும் சிறு தேங்காய்த் துணிக்கைகள் அதியுயர்ந்த சுகாதார முறைகளில் தொழிற்சாலையில் விசேட மான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரத்தில் இடப்பட்டு அதியுயர்ந்த அமுக்கத்தைச் செலுத்துவதன் மூலம் தேங்காய்ப் பால்மா பெற்றுக் கொள்ளப் படும்.
- மேலும் இரண்டாவது முறையாக அதே இயந்திரத்தில் இட்டு ஐதான தேங்காய்ப் பால் பிழிந்தெடுக்கப்படும். பின் இப் பாலானது முதலில் பிளிந்தெடுக்கப்பட்ட தேங்காய்ப் பாலுடன் இயந்திரம் மூலம் நன்றாகக் கலக்கப்படும். பின் தேங்காய்ப் பால் கலவையானது $80^{0C}$ $85^{0C}$இல் வெப்ப நிலைக்குள் உள்ளாக்கப்பட்டு பின்பு, $12^{0C}$ இல் 3 நிமிடம் வரை குளிரூட்டப்பட்டு பக்றீரியாக்கள் அழிக்கப்படும். அதன் பின் குளிரூட்டப்பட்ட தாங்கிகளில் அடைக்கப்படும்.
- குளிரூட்டப்பட்ட தேங்காய்ப் பால் அதே நிலையில் பவுசர் மூலம் தேங்காய்ப் பால்மா கைத்தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்படும்.
- தேங்காய்ப் பால்மா தொழிற்சாலையில் திரும்பவும் $85^{0C}$ வெப்ப நிலையில் பக்றீரியா அழிக்கப்பட்டு அதன் பின் சீரான தன்மையாக்கும் (Homogenizer) இயந்திரத்தில் இடப்பட்டு நன்றாகக் கலக்கப்பட்டு விசிறுவதன் மூலம் உலர்த்தும் இயந்திரத்தில் இடப்படும்.
- இங்கு விசிறி உலர்த்தியினுள் (Spray Drying) செலுத்துவதன் மூலம் சிபாரிசு செய்யப்பட்ட தரத்தின் கீழ் உலர்த்தப்படும். இப்படி உலர்த்தப்பட்ட தேங்காய்ப் பால்மா தேவையான அளவுகளில் பைக்கற்றுக்களில் பொதி செய்யப்படும்.
- தினமும் தொழிற்சாலையில் உற்பத்தி செயன்முறை ஆரம்பிக்கப்பட்ட முன்பு பாவனைக்கு எடுக்கப்படும். சகல உபகரணங்களும் 600உ வெப்பநிலை நீரில் கழுவப்பட்டு துப்புரவாக்கப்படும். அதே போல் உற்பத்தி நிறைவுபெறும் தருவாயிலும் அத் தொழிற்சாலை வளாகத் தினுள் காணப்படும் சகல உபகரணங் களும் கிருமிநாசினிகள், தொற்றுநீக்கிகள் பாவிப்பதன் மூலமும் பிறகு சுத்தமானநீரில் கழுவப்பட்டு துப்பரவு செய்யப்படும்.
- தேங்காய்ப் பால்ஃ செறிவானதேங்காய்ப் பால் (Coconut Milk/Coconut) மனிதனுக்கு பாதிப்பை விளைவிக்கும் நோய்க் காரணி களான பக்றீரியாக்களும் அழிக்கப்படும் செய்முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நுண்ணங்கிகளற்ற சுத்தமான தேங்காய் பருப்பு செறிந்த திரவமாக மாற்றப்பட்டு பாவனைக்கு உகந்ததான உற்பத்தித் தேங்காய்ப் பால் என அழைக்கப்படும்.
- மேலே குறிப்பிட்ட முறையில் அதி அமுக்கத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தேங்காய்ப் பாலானது உண்மையில் எண்ணெய், புரதம், நீர் என்பவற்றிலான ஒரு குழம்பு ஆகும். இங்கு சூடான தேங்காய்ப் பால் கலந்த எண்ணெயானது நீரிலிருந்து வேறுபடாமல் ஒன்றாகக் குழம்பு நிலையில் ஸ்திரப் பதார்த்தமாகக் காணப்படும். இத் தன்மையே இப் பொருளை அதிக காலத்திற்கு கெடாமல் வைத்திருக்க உதவும். ஆசிய, மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பெண்கள் கையினால் பிளிந்தெடுக்கப்படும் பாலானது தேங்காய்ப் பால் எனவும் செறிந்த தேங்காய்ப்பாலானது தேங்காய்க் கட்டிப்பாலாகவும் கருத்தில் கொண்டு பாவனைக்கு எடுக்கப்படும்.
- இப்படியாக சூடாக்கிய தேங்காய்ப் பாலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தேங்காய் எண்ணெயானது சிறு துணிக்கைகளாக ஆக்கப்படுவதற்கு தொடர்ந்து சீரான தன்மையாக்கும் இயந்திரம் மூலமும் பால்ப் பவுடரைலோஷன் செய்வதன் மூலமும் மேற்கொள்ளப்படும்.
- கிடைக்கப் பெறும் தேங்காய்ப் பாலானது சூடான நிலையில் காணப்படும் போதே சுகாதாரமான முறையில் 400 கிராம் கொள்கலன் அல்லது பைக்கற்றுக்களில் அடைக்கப்படும். அத்துடன் இவை ஆறு மாதத்திற்கு மேலாக வைத்திருக்கப்படக் கூடியவை. அதி வெப்பநிலை, (Ultra high temperature) புதிய தொழில்நுட்பத்தைப் பாவித்து தயாரிப்பதன் மூலம் அதி கூடிய காலத்திற்கு கெடாமல் வைத்துக் கொள்ளலாம்.
- வீட்டு சமையலுக்கு மேலதிகமாக, குளிரூட்டப்பட்ட உணவு தயாரிப்பு வெதுப்பககைத்தொழில், இனிப்புப் பண்டம் தயாரிப்பு விசேடமான குளிர் பான வகைகள் ,உயர்ந்த உணவு போன் றவை தயாரிக்கவும் தேங்காய்ப் பால்மா பயன்படுத்தப்படும்.
- இலங்கையின் தேங்காய்ப் பால்மாவானது ஐக்கிய ராஜ்ஜியம், மத்திய கிழக்கு நாடுகள், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, தாய்லாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளிற்கு ஏற்றுமதி ஆகின்றது.

தேங்காய்க் கிறீம், (Coconut Cream)இது பகுதியாக திண்ம நிலையில் காணப்படுவ தோடு இரசாயன பதார்த்தங்களோ வேறு சேமித்து வைத்திருக்கக் கூடிய பொருட்கள் சேர்க்கப்படாது அதியுயர் தரக்கட்டுப் பாட்டில் தேங்காயிலிருந்து தயாரிக்கப்பட்ட தாகும். குளிரூட்டப்பட்ட நிலையில் 12 மாதங்கள் வரை களஞ்சியப்படுத்தி வைத்தி ருக்கக் கூடிய இப்பதார்த்தம் இயற்கையான உற்பத்தி ஆகும்.

இது உணவு தயாரிக்கவும் இனிப்புப் பண்டம் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின் றது. இவற்றின் மூலம் பொருட்களை உற்பத்திசெய்யலாம்.

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com







# அழகின் இரகசியம் 7

**கரும்புள்ளி தழும்புகள் மறைய:**

நாகப்பழப் பொடி : 2 டிஸ்பூன்

ஒரேஞ் பழத்தோல் பொடி : 2 டிஸ்பூன்

இவற்றை பச்சைப் பாலில் குழைத்து முகத்தில் தடவவும். 10 நிமிடங்கள் கழித்து கழுவினால் முகத்திலுள்ள கரும்புள்ளிகள் திட்டுக்கள் மறையும்.

பப்பாளிக் கூழ் : 1 டிஸ்பூன்

ஒரேஞ்பழத் தோல்பொடி : 2 டிஸ்பூன்

இவற்றை பச்சைப் பாலில் குழைத்து முகத்தில் தடவவும். 10 நிமிடங்கள் கழித்து கழுவினால் முகத்திலுள்ள கரும்புள்ளிகள் திட்டுக்கள் மறையும்.

பப்பாளிக் கூல் : 1 டிஸ்பூன்

கஸ்தூரி மஞ்சள் : 1/4 டிஸ்பூன்

ரோஜாஇதழ் : 3 டிஸ்பூன்

இவற்றை கலந்து பேஸ்ட்டாக்கி தழும்பு உள்ள இடங்களில் தடவவும். 15 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். இதையே வாரத்தில் 3 முறை செய்து வந்தால் முகம் பளிச்சென இருக்கும்.

மாங்காய் இஞ்சிப் பொடியும், சந்தனப் பொடியும் கலந்து சருமத்தில் கொசுக்கடி பூச்சிக்கடியால் ஏற்பட்ட தழம்புகளின் மீது தடவலாம்.

அகலமான பாத்திரத்தில் சூடான நீரை எடுத்து அதில் ஒரு எலுமிச்சம் பழச் சாற்றைக் கலக்கி முகத்திற்கு நீராவி பிடிக்கலாம்.

கற்றாழையின் உள்ளே இருக்கும் சோற்று பகுதியை உடலில் எங்கெல்லாம் தீக்காயத் தழம்புகள் உள்ளதோ அங்கெல்லாம் தடவி வந்தால் தழம்புகள் மறைந்து விடும்.

கோதுமைத்தவிடு பால் இவை சம அளவில் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவினால் சிறிது நாளில் மறைந்து விடும்.

**தேமல் நீங்க:**

ஒமுவல்லி இலை சாறு ஒரு டிஸ்பூன் எடுத்து தேமல் உள்ள இடங்களில் தடவி சிறிது நேரத்தில் கழுவலாம்.

**கோடுகள் போக:**

எடை குறைந்தாலும் கூடினாலும் மார்பு வயிறு தொடை போன்ற இடங்களில் கோடுகள் ஏற்படும். இதைப் போக்க

பாதாம் எண்ணெய் 2 டிஸ்பூன்

லுவெண்டா எண்ணெய் 4 முதல் 5 துளிகள்

கலந்து கோடுகள் உள்ள இடத்தில் போடவும்.

**இறந்த செதில்களை அகற்ற :**

அரைத்த அப்பிள் 2 டிஸ்பூன் எடுத்து முகத்தில் போட்டு 5 நிமிடங்களுக்குப் பிறகு குளிர்ந்த நீரில் கழுவலாம்.

ஒரு டேபிள் ஸ்பூன் : பப்பாளிப் பழம்

8 சொட்டுக்கள் : அன்னாசிப் பழச்சாறு

கலந்து கழுத்து முகத்தில் தடவி 2 நிமிடங்கள் லேசாக மசாஜ் செய்யவும்.

**சரும நிறம் கூடுதலாக கிடைக்க:**

சந்தனத் தூள் : 20 கிராம்

ரோஜா இதழ் : 20 கிராம்

பப்பாளிக் கூல் : 4 டிஸ்பூன்

வெள்ளரிக் கூல் : 4 டிஸ்பூன்

முல்தானி மெட்டி : 10 கிராம்

இவற்றை சிறிது நீருடன் கலந்து முகத்தில் பூசவும். 15 நிமிடங்கள் ஊற வைத்துக் கழுவினால் முகம் பளிச்சென்று நல்ல நிறத்துடன் இருக்கும்.

கொண்டல் கடலை : 2 டேபிள்ஸ்பூன்

பச்சரிசி : 2 டேபிள்ஸ்பூன்

இவற்றை இரவில் ஊற வைத்து காலையில் அரைத்து பூசிக் கழுவலாம். (அல்லது மாவாகவும் உபயோகப் படுத்தலாம்.)

சுத்தமான தேனை புருவங்கள் மீது படாமல் தடவி 10 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவினால் முகம் பளிச்சென்று மென்மை யாகவும் இருக்கும்.

மாதுளம் பழச்சாறு : 1 டேபிள்ஸ்பூன்

வெள்ளரிச் சாறு : 1 டிஸ்பூன்

எலுமிச்சைசாறு : 3 சொட்டு

கலந்து முகத்தில் தடவி அரை மணி நெரம் கழித்து கழுவ வேண்டும். இதை வாரம் 3 முறை செய்தால் நல்ல நிறம் கிடைக்கும்.

**சருமம் இறுக்கமாக:**

ஈஸ்ட் பவுடர் : 2 டிஸ்பூன்

சோறு வடித்த கஞ்சி : 1 டிஸ்பூன்

எடுத்துக் கொண்டு வாரம் ஒரு முறை முகத்திலும் கழுத்திலும் தேய்த்து அரை மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவினால் சருமம் இறுக்கமாகும்.

தொடரும்....





# நம்பிக்கை நாயகிகள்

பாதியில் தொலைந்த உறவுகள்... பரிதவிக்க விட்ட சமுதாயம் என தனித்து எதிர் நீச்சலிட வேண்டி காலம் நிர்ப்பந்தித்தபோது, சளைக்காமல் வாழ்வுடன் போராடும் பெண் களின் கதைகள் இவை. எவ்வளவு சிரமம் என்ற போதும் வாழ்வை எதிர்கொள்ளும் இவர் களின் தைரியத்திற்கு ஒரு பெரிய சல்யூட் வைக்கலாம். சல்யூட் பெண்களின் வரிசையில் இந்த வாரம் தனபாலசிங்கம் மரிய புஷ்பம்.

பலாலியில் பிறந்த மரிய புஷ்பத்திற்கு ஐந்து சகோதரிகள். 30 வருடத்தின் முன்னர் யுத்தம் அவர்களை வீடுகளை விட்டு விரட்டியது. கோப்பாயில் குடியேறிய மரிய புஷ்பம் தையல்துறையில் இறங்கினார்.

மரியபுஷ்பத்தின் குடும்பக்கதையும் சிரமம் தான். திருமணமாகி மகனை பறிகொடுத்த சகோதரி, திருமணம் செய்யாத பெண்கள் என இவரது தோளில் நிறைய சுமைகள். எனினும் சளைக்காமல் எதிர் நீச்சலடிகிறார் மரியபுஷ்பம். தலையணைக்கான கழிவு துணிகளை எடுத்து, தலையணை தயாரித்து விற்பனை செய்கிறார்.

இப்பொழுது தலையணை தவிர்த்து, சிறு பிள்ளைகளிற்கான உடைகள், உடல் பருத்த முதியவர்களிற்கான லுங்கிகளும் தயாரிக்கி றார். தன்னுடைய தயாரிப்புக்களை அவரே நேரடியாக விற்கிறார். வீட்டில் விற்பனை செய்வதுடன், சுன்னாகம் சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய் கிறார்.

ஆரம்பத்தில் தையல் இயந்திரம் கூட இல்லாமல் திண்டாடியுள்ளார். அருகிலுள்ள வைத்தியர் ஒருவர்தான் தையல் இயந்திரம் வாங்கிக் கொடுத்து கைதூக்கி விட்டுள்ளார்.

கிடைக்கின்ற சிறு வருவாயில் தனது சகோதரிகளிற்கும் உதவி, தனது தேவை களையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் இந்த சளைக்காத பெண்மணி. தனித்து வாழ் பவர் என்பதால் அரச உதவிகள் உள்ளிட்ட பல உதவிகள் கிடைப்பது சிரமமாக உள்ளதாக கூறுகிறார்.

என்னதான் ஓடாக தேய்ந்தாலும் மரிய புஷ்பத்தின் சிறிய குடிசைக்குள்ளிருந்து வறுமையை விரட்ட முடியாமல் சிரமப்படு கிறார். அவரது அயராத உழைப்பை பார்ப்ப வர்கள் ஆச்சரியமடைந்தாலும், யாருடைய உதவியும் அவருக்கு கிடைக்கவில்லை.

யாராவது தயாளசிந்தனை கொண்டவர் களிடமிருந்து கிடைக்கும் சிறு உதவியும் மரிய புஷ்பம் குடும்பத்தின் வறுமை ஓரளவு நீங்கும்.

நீங்களும் உதவலாம்: தற்போது அவருக்கு அவசியமாக தேவைப்படுவது வியாபாரத்தை சற்று விஸதரிப்பது. அதற்கு சிறிய முதல் அல்லது துணிகள். மரிய புஷ்பத்திற்கு உதவ விரும்புபவர்கள் தீபத்தின் தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது deepamdesk@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.



# வெப்ப காலத்தில் துர்நாற்றம் அதிகமா?

வெப்ப காலம் தொடங்கி விட்டாலே துர்நாற்றம் ஒன்று இயல்பாக மனித உடலில் வீச ஆரம்பித்து விடு மல்லவா. எனவே இதை தாங்க முடியாத நம்மவர்கள் பான்சி கடைகளில் கிடைக்கும் வாசணைத்திரவியங்களை தான் அதிகம் பயன்படுத்துவது வழமை.

ஆனால் இயற்கையாக ஏற்படும் இந்த வியர்வை துர்நாற்றத்திற்கு வாசணைத் திரவியங்கள் தகாதவையாகும். இதில் இருந்து விடுபட அதிகளவு தண்ணீர் குடிக்க வேண்டும். பழங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். கடலைமாஇ பச்சைபயறுஇ மஞ்சள் என்பவற்றை பயன்படுத்தி குளிக்க வேண்டும்.

இளம் சூடான தண்ணீருக்குள் துளசி இலை போட்டு ஊற வைத்து அந்த நீரினால் குளித்தால் அதிகளவில் வியர்வை நாற்றத்திற்கு ஆளாகுபவர்கள் அதிலிருந்து விடுபட முடியும். இவற்றை எல்லாம் செய்தும் நாற்றம் அதிகமாக உள்ளதா நீங்கள் மருத்துவரை நாடி ஆலோ சணை பெற்றுவிட வேண்டும். அதிக வியர்வை நாற்றம் கூட உடல் ஆரோக்கிய மின்மையின் அறிகுறியாகும்.

# கட்டிளமைப் பருவ கர்ப்பங்கள்

வைத்தியகலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை - நல்லூர்



கட்டிளமைப் பருவம் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் நியமத்தின் படி 10 வயது முதல் 19 வயது வரையுள்ள காலம் கட்டிளம் பருவம் எனப்படும்.

கட்டிளம் பருவத்தில் குழந்தைப் பருவத்தில் இருந்து இளைஞர் யுவதிகளாக மாறுவதற்கிடையே உடல் மற்றும் உளரீதியாக பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. சமூக மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முதன் முறையாக முகம் கொடுக்கின்றனர். இப் பருவத்தில் ஏற்படும் சவால்களுக்கு சரியான வகையில் முகம் கொடுக்காவிடில் பாரிய எதிர்மறை விளைவுகளை சந்திக்க வேண்டி வரலாம்.



கட்டிளம் பருவத்தில் உடல், உள ரீதியாக ஏற்படும் மாற்றங்களை வெற்றி கொள்ளாமையின் ஒரு விளைவே கட்டிளம் பருவத்தில் கர்ப்பம் தரிப்பதற்கு காரணமாகின்றது.

கட்டிளம் பருவ கர்ப்பம் என்றால் 20 வயதிற்கு முன்னர் எதிர்பார்த்தோ அல்லது எதிர்பாராமலோ ஏற்படும் கர்ப்பங்கலிள். 20 வயதிற்கு குறைந்த பெண் உடல் உள ரீதியில் தாயாவதற்கு முழுமையான விருத்தியை அடையாததால் ஆபத்த நிறைந்ததாகும்.

கட்டிளம் பருவகர்ப்பங்கள் ஏற்படுவதற்கு இளவயது திருமணங்கள், திருமணத்திற்கு முந்திய பாலியல் தொடர்புகள், நெருக்கமான வாழ்விடங்கள், சகவயதினரின் நெருக்கீடுகள், இளவயது காதல்களும் முறை தவறிய உறவுகளும் கர்ப்பம் ஏற்படுவது தொடர்பான அறிவின்மை, கர்ப்பத் தடை முறைகள் தொடர்பான அறிவின்மை, பாலியல் துஸ்பிரயோகங்கள் என்பன காரணங்களாகும்.

கட்டிளம் பருவ கர்ப்பத்தினர் ஏற்படும்பிரதான ஆபத்து கர்ப்பப்பை கர்ப்பத்தை தாங்கும் வகையில் பூரண வளர்ச்சி அடையாமையால் அதிகரித்த கர்ப்ப கால சிக்கல்கள் ஏற்படும். அதிகரித்த அளவில் கர்ப்ப கால குறுதிச்சோகை, உயர்குருதி அமுக்கம், நீரிழிவு நோய் ஏற்படல், தாய் மரணம் பிரசவத்தின் போது இரண்டு மடங்காக அதிகரிக்கலாம். பாதுகாப்பற்ற கருச்சிதைவால் (சுயமான அல்லது தூண்டப்பட்ட) ஏற்படும் ஆபத்துக்களும் குறை மாத பிரசவங்களும் அதன் விளைவாக ஏற்படும் சிக்கல்களும் ஒடுக்கமான பூப்பென்பு என்பதால் நீண்ட நேர பிரசவ வேதனையும் பிரசவம் தடைப்படுதலும்.

பிள்ளை பேற்றின் பின்னான தாக்கங்கள், பாலியல் நோய்கள் மற்றும் பிற நோய்களின் தாக்கம், அதிகரித்தல் போன்றவையாகும்.

இவற்றை விட சமூக பொருளாதார ரீதியில் கல்வி பாதிப்படைதல், உள ரீதியான பாதிப்பு, ஆரோக்கியமான கரு வளர்வதில் அக்கறையின்மை பிள்ளை வளர்ப்பிற்குரிய முதிர்ச்சி அற்ற தன்மை, திருமண வாழ்க்கையில் பிரச்சினைகளை எதிர் கொள்ளுதல்.

குழந்தைக்கு ஏற்படும் ஆபத்து நிலைகளாவன மருத்துவ ரீதியிலான பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள் ஆகும். இதனால் குழந்தை பிறப்பு நிறை குறைவு, பிறவி குறைபாடுகள், அங்கவீனங்கள், சிசு மரணம், பாலியல் நோய்களின் தாக்கம் அதிகரித்தல், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த குழந்தைகள், விவேகம் குறைந்த குழந்தைகள், குழந்தை வளர்ந்து பெரியவரானதும் உயர் குருதி அமுக்கம்,நீரிழிவுஇருதயநோய்கள்,உடல்நிறை அதிகரிப்பிற்கு ஆளாகுதல், சமூக ரீதியில் சிறந்த வழிகாட்டல் இன்மை, மீண்டும் இளவயதில் கர்ப்பம் தரித்தல் என்பனவாகும்.

இதை தவிர கர்ப்பம் தரித்த பெண் திருமணமாகாதவராயின் பெற்றோர் நண்பர்களால்ஒதுக்கப்படல்,சமூக அவமானத்திற்குள்ளாதல், கலங்கிய நிலையும் தனது நிலையை உறுதி செய்ய முடியாத நிலையும். எதிர் கால கனவுகள் சிதைக்கப்படுதல். பாதுகாப்பற்ற கருச்சிதைவு இதனால் மலட்டு தன்மை. இறப்பு உளத்தாக்கம். சமூக எதிர் விளைவுகள் மன வடு தற்கொலை குழந்தையின் பிறப்பை உரிய முறையில் பதிய முடியாமை. குழந்தை சமுதாயத்தால் பழிக்கப் பட்டு ஒதுக்கப்படலாம். பிள்ளைக்கு அங்கீகாரமின்மை.

இளவயது கர்ப்பங்களை தவிர்க்க கல்வி பொழுது போக்குகளில் கூடிய கவனம் செலுத்துதல். தாய்மையடைதலையும் அதனால் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் தெளிவாக விளங்கி கொள்ளுதல். இளமைப்பருவ உடல் உள் மாற்றங்களை விளங்கி கொள்ளுதல். பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்தல். திருமணத்திற்கு முன்னரான உடல் உறவுகளை தவிர்த்தல். அல்லது சந்தர்ப்பத்தை வழங்காமல் இருத்தல். சமூக கலாச்சாரங்களை மதித்து பின்பற்றுதல் இளவயதில் தாய்மைஅடைவதை தவிர்த்தல் என்பன வாகும்.



# கர்ப்ப காலத்தில் வாந்தியைத் தடுக்கும் வழிகள்

கர்ப்ப காலத்தை சில பெண்கள் வெகு சுலபமாக கடந்து விடுவார்கள். ஆனால் பலருக்கு இது மிகவும் கஷ்டமாக இருக்கும். அதற்கு காரணம் வாந்தியும் குமட்டலும் தான்.

குறிப்பிட்ட சில வாசனைகள், சில உணவுகள், சோர்வு, பதற்றம், உணர்ச்சிமிக்க வயிறு, விற்றமின்கள் குறைபாடு ஆகிய காரணங்களாலும் கூட வாந்தியும் குமட்டலும் ஏற்படுகிறது.

குமட்டலும் வாந்தியும் அன்றாட பழக்கவழக்கங்களை வெகுவாக பாதிக்கும். எளிய சிகிச்சைகள் மற்றும் வாழும் முறையில் சில மாற்றங்களோடு கர்ப்ப காலத்தின் வாந்தியை தடுக்க உதவும் உணவுகள்:



தண்ணீர் குடியுங்கள் வாந்தி, குமட்டல் என வந்துவிட்டால் தண்ணீர் தான் சிறந்த மருந்தாக விளங்கும்.

ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கும் பெண்களுக்கு வாந்தியும் குமட்டலும் ஏற்படும் வாய்ப்புகள் குறைவாக உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் உடலை நீர்ச்சத்துடன் வைத்திருக்க உதவும். கர்ப்பிணி பெண்களுக்கு வயிற்றில் உள்ள சிசுவிற்கும் இது முக்கியமாகும்.

**எலுமிச்சை**

கர்ப்ப காலத்தின் போது ஏற்படும் வாந்தியை கையாள எலுமிச்சையும் உதவும். அதன் இதமளிக்கும் வாசனை குமட்டலை குறைத்து, வாந்தியை தடுக்கும்.

கூடுதலாக விற்றமின் சி கர்ப்பிணி பெண்களுக்கும் வயிற்றில் உள்ள சிசுவிற்கும் மிக நல்லதாகும்.

எலுமிச்சை ஒன்றை ஒரு டம்ளர் தண்ணீரில் பிழிந்து, அதனுடன் கொஞ்சம் தேனை சேர்த்துக் கொள்ளுங்கள். இதனை தினமும் காலையில் குடித்து, வாந்தி மற்றும் குமட்டலை தடுத்திடுங்கள்.

வாந்தி அல்லது குமட்டல் உணர்வின் போது எலுமிச்சை துண்டுகளை முகர்ந்து கொள்ளலாம். எலுமிச்சை மிட்டாயும்கூட உதவும்

**பெருஞ்சீரகம்**

கர்ப்ப காலத்தின்போது செரிமானத்தை மேம்படுத்தி, வாந்தி எடுக்கும் உணர்வை குறைக்கும். கூடுதலாக வாசனை மிக்க இது வயிற்றுக்கு இதமளிக்க உதவும்

கொஞ்சம் பெருஞ்சீரகத்தை படுக்கையின் அருகில் வைத்துக்கொண்டு, குமட்டல் ஏற்படும்போது அதனை வாயில் போட்டு மெல்லவும்.

1 ஸ்பூன் பெருஞ்சீரகத்தை ஒரு கப் வெந்நீருடன் சேர்த்து கொதிக்க வைத்து, ஆற விட்டு வடிகட்டி, அதனுடன் சிறிதளவு எலுமிச்சை ஜூஸ் மற்றும் தேனை சேர்த்துக் கொள்ளுங்கள். இதனை தினமும் காலையில் மெதுவாக குடிக்கவும்.

எலுமிச்சை, பெருஞ்சீரகம் கர்ப்ப காலத்தில் ஏற்படும் குமட்டல் வாந்தியை கட்டுப்படுத்தும்.



# வெங்காயப்பூ

சில மரக்கறிகள் சீசனுக்கு மலிவாக கிடைக்குமல்லவா. எது மலிவாக வாங்க முடிமோ அதை தானே நம்மவர்கள் பெரும்பாலும் வாங்கி சமையல் செய்வார்கள். ஒரு குடும்பத் தலைவியாக நமது பெண்களின் சிக்கனப் பழக்கமல்லவா அது. இப்போ சீசனாக உள்ளது வெங்காயத்தாள் அல்லது வெங்காயப்பூ என்பதால் பெரும்பாலான வீடுகளில் ஸ்பெஷல் இதுதான். சமைத்தால் மட்டும் போதுமா அதில் உள்ள பலாபலனை அறிந்து பக்கத்து வீடுகளுக்கும் மலிவாக கிடைக்கும் பொழுதாவது வாங்கி சமையுங்கள் என்று சொல்ல வேண்டாமா.

வெறும் வாசனைக்கும் ருசிக்கும் மட்டுமானதல்ல இது. ஏராளமான சத்துக்கள் நிறைந்தது. இதில் கந்தகச் சத்து அதிகம். அத்தோடு கலோரி குறைந்தது.

விட்டமின் சீ விட்டமின் பி2 தயமின் என்பன் அதிகம். இதை விட மக்னீசியம் பொட்டாசியம் மற்றும் குரோமியம் நார்ச்சத்துக்கள் என்பனவும் நிறைந்துள்ளன.

நீரிழிவு நோய், புற்றுநோயை குணப்படுத்தும். இதில் உள்ள பெக்டின் நீரில் கரையக்கூடியது. குறிப்பாக பெருங்குடல் புற்று நோயை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை குறைக்கின்றது. கண் நோய் மற்றும் கண் பிரச்சினைகளுக்குநல்லதீர்வை வழங்குகின்றது. இதய நோய் அபாயத்தையும் குறைக்கின்றது. இதில் உள்ள சல்பர் சேர்மங்கள் இரத்த அழுத்த அளவுகளை குறைக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் உதவுகின்றது. வெங்காயத்தாள் இரத்ததில் உள்ள கொழுப்பு அளவுகளை குறைக்க உதவுகின்றது.

வெங்காயத்தாளில் உள்ள குரோமியம் சத்து நீரிழிவு நோய்க்கான சுகாதார நலன்களை வழங்குகின்றது. குருதியில் காணப்படும் சுகரின் அளவை கட்டுப்படுத்துகின்றது. மற்றும் குளுக்கோஸ் ஏற்புத்தன்மையை அதிகரிக்கின்றது.






# பொறுமையும் திட்டமிடலுமே அத்திவாரங்கள்

## கிரிதரனின் வெற்றி இரகசியங்கள்

பொறுமை கடலை விட பெரியது. மனிதனிற்கு பொறுமை அவசியம். அது உள்ளவன்தான் வெற்றி பெறுவான். குறிப்பாக வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிற்கு அது அத்தியாவசியம். பொறுமை உள்ள மனிதன்தான் மெதுவாக ஆனால் நிதானமாக முன்னேறுவான் என்கிறார் கிரிதரன். வவுனியா கிரி எலக்ரோனிக் சுப்பர் மார்க்கெட் உரிமையாளரின் வெற்றிச் சூத்திரம் இது.

சிறிய முதலீட்டில் பழக்கடையொன்று ஆரம்பித்து, இன்று வவுனியாவின் இலத்திரனியல் பொருட்கள் விற்பனையின் அடையாளமாக மாறிவிட்ட பெரிய வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாளர் கிரிதரன். அயராத உழைப்பு... உரிய காலம்வரை காத்திருந்த பொறுமை என்பனதான் கிரிதரனை இன்றும் எல்லோரும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

மிகச்சாதாரண ஒருவராக வியாபாரத் துறையில் புகுந்து இன்று முன்னுதாரண தொழிலதிபராக மாறிவிட்ட கிரிதரனின் கதை பலருக்கும் வழிகாட்டுதலாக இருக்கும்.

வவுனியா பண்டாரிக்குளத்தை சேர்ந்த கிரிதரன் 18 வயதில் வர்த்தகத்துறைக்குள்' புகுந்தார். பாடசாலை கல்வி நிறைவடைந்ததும் அவருக்கு தெரிந்த ஒருவரின் கடைக்கு உதவியாளராக சென்றார். வியாபாரத்தின் அடிப்படைகள், நுணுக்கங்களை ஆறுமாதம் அங்கு நின்று கற்றுக் கொண்டார்.

பின்னர் 1992ம் ஆண்டு தனது சொந்த முயற்சியை ஆரம்பித்தார். 'அப்போது என்னிடமிருந்தது பதினைந்தாயிரம் ரூபா. வவுனியா பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக சின்ன கடையொன்றை திறந்தேன். பழங்கள், பிஸ்கற்,இனிப்புக்கள் விற்கும் கடை. நான்தான் அங்கு முதலாளியும் தொழிலாளியும். எனது வியாபார அணுகுமுறை பலருக்கும் பிடித்திருந்தது. நிறையப்பேர் தேடி வரத் தொடங்கினார்கள். அதன் பின்னர் வீடியோ கடை தொடங்கினேன். சீடிக்கள் வாடகைக்கு விடுவது. அது மாற்றமடைந்து கிரி எலக்ரோனிக் சுப்பர் மார்க்கெட்டாகியுள்ளது' என சுருக்கமாகவும், தன்னடக்கமாகவும் தனது 25 வருட வியாபார வெற்றிக்கதையை சொன்னார்.

கிரிதரனின் இலக்கு இத்துடன் முடியவில்லை. தனது எதிர்கால திட்டங்கள் பற்றி விளக்கினார். 'இன்னும் பெரியவில் இலத்திரனியல்விற்பனை தொழிலைவிஸ்தரிக்கவுள்ளேன். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு நகரங்களிலும் இதன் கிளைகள் தொடங்கவுள்ளேன்' என்றார்.

'எங்களது விற்பனைநிலையத்தில் தொடர்ந்து பொருள் கொள்வனவில் ஈடுபடுபவர்களிற்கு கடடிப்படையில் பொருள் வழங்கும் திட்டமும் நடைமுறையில் உள்ளது. வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்தும் பல திட்டங்கள் இங்கு உள்ளது. பரிசுப் பொருட்கள் கூட வழங்கப்படுகின்றன. வாடிக்கையாளர்கள்தான் வர்த்தகர்களின் ஒரே ஆதாரம். அவர்களுடனான உறவை சுமுகமாக வைத்திருப்பது வெற்றியின் அடிப்படை மூலதனம்' என்கிறார்.

ஒருநாளின் முழுநேரமும் தனது வர்த்தகம் பற்றியே சிந்திப்பதாக கிரிதரன் கூறுகிறார். 'சிலநாளில் வாடிக்கையாளர்கள் கடைக்கு வர மாட்டார்கள். சலித்துப்போய் நேரத்துக்கே கடையை பூட்டிவிட மாட்டேன். ஏனெனில் பூட்டியதற்கு மறுநிமிடமும் யாராவது வரலாம். சிறிய வர்த்தகத்தில் ஈடுபடும்போது ஆடம்பரமாக செலவிட கூடாது. பெரிய வர்த்தகம் தொடங்குவதற்கான மூலதனத்தை சேமிக்கும் காலமது' என சின்னசின்ன டிப்சும் தந்தார்.

சிறிய வர்த்தக நிலையமோ, பெரிய வர்த்தக நிலையமோ. எதுவென்றாலும் வாடிக்கையாளர்கள்தான் முக்கியம். அவர்கள் மனம் கோண நடக்கக்கூடாதென்ற வர்த்தக இரகசியத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டார்.

வர்த்தகத்தை ஆரம்பித்த தருணங்களில் கடன்பெறும் நிறுவனங்களில் கடன்பெற முடியாமலிருந்ததையும் குறிப்பிட்டார். பணம் தேவையான தருணத்தில் கடன் தரமறுத்த வங்கிகள், கடன் கொடுக்கும் நிறுவனங்கள் இப்பொழுது தினமும் கடன் வாங்க நச்சரிப்பதை சுட்டிக்காட்டி ஒ விடயத்தை குறிப்பிட்டார். 'இல்லாதவர்களிற்கு கொடுத்து அவர்களை முன்னேற்றுவதுதான் அவற்றின் நோக்கமாக இருக்க வேண்டமே தவிர, இருப்பவனுடன் 'டீல்' பேசுவதல்ல. இந்த வகையான வங்கிகள், கடன் கொடுக்கும் நிறுவனங்களால் சமூகத்திற்கு எந்த பலனுமில்லை' என்றார்.

தனது பொறுமையும், திட்டமிடலும்தான் வெற்றிக்கு காரணமானதென கூறினார்.

இறுதியாக விடைபெறும்போது இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டார். 'அடிக்கடி நடந்து வந்த பாதையை திரும்பி பார்க்கிறேன். அதனால்த்தான் மேலும்மேலும் முன்னேற முடிகிறது. எல்லாவற்றையும் விட நல்ல மனிதனாக வாழ முடிகிறது' என்றார்.







நானாட்டன் கோட்டமட்ட பாடசாலகளிற்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் நடந்தது.

# பனை தரும் வளங்கள்



பி.சியா

இயற்கை எமக்களித்த பொக்கிசங்களை எல்லாம் தவறவிட்டு விட்டு எங்கெங்கோ அலைந்து நோய்களை விலை கொடுத்து வாங்கும் மாந்தர்கள் நாங்கள். இதற்கு சிறந்த உதாரணம் பனை. பனை நமக்களிக்கும் வளங்கள் மிகப் பெரியவை. ஆனால் அதை சரியான முறையில் பயன்படுத்த தவறி நிற்கின்றோம். அதன் தார் பரியங்களை உணராது போய்விட்டோம். உயர்ந்த விலைக்கு மட்டும் நாங்கள் அவோட் கொடுக்கவில்லை மினு மினுக்கும் பொருட்களுக்கும் சேர்த்தே. எந்தவொரு பொருளும் மினுமினுத்தால் தரமானவை என்ற தவறான தெரிவு தான் இன்றய சந்ததியின் நோய்வாய்க்கு காரணமாகின்றது.

நமது இயற்கை பரிசளித்த பனையின் சிறப்பு பற்றி அறிவீர்களா? ஏடகம் கற்பக்ததரு, கரும்புறம், காமபுரம, தருமவிசாரன், தாலம், தாணி, துரு, மேகம் நீலம் பரிபாத்திரம், பார்பதம, புற்பதி, புல்லாபதி போந்து போற்தை என்பன இதன் இயற்பெயர்கள்.

இந்த கற்பகத்தருவின் வேர் தொடக்கம் நுனி வரைக்கும் உண்பொருட்களாகவும் உண்ணாப் பொருட்களாகவும் எமது பிரதான பயன்பாட்டில் பனை பயன் தருகின்றது.

இலங்கையில் உள்ள 1 கோடியே 12 லட்சம் பனை மரங்களில் யாழ் மாவட்டத்தில் 70 இலட்சம் பனைகள் பொருளாதார அபிவிருத்திக்கும் சூழல் பாதுகாப்பிற்கும் 50 மில்லியன் சுழற்சியை வருடாந்தம் தருகின்றது என பனை செல்வம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் மோகனதாஸ். இவை ஒழுங்காக பயன்படுத்தப்படும் இடத்தில் 68,650 மில்லியன் ரூபா வருமானத்தை வருடா வருடம் தரவல்லது என ஆய்வுகள் குறிப்பிடுவதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் உற்பத்தி செய்யும் பண்டங்கள் பொருட்களையே விற்பனை செய்ய முடியவில்லை என அண்மைக்காலமாக பனை வள உற்பத்தி சங்கங்கள் விசனம் தெரிவிப்பது கவலைக்குரிய விடயமே.

ஊண் பொருட்களாக பழம, பனாட்டு, ஜாம், கோடியல, ஜோஸ், பால்மெலோ அல்வா, குளிர்களி, இனிப்புவகை, லோனவன, மதுசாரம, வினாகிரி, பென்ரின் மிருக உணவுக்கு என பழம்+பழச்சாற்று முறையிலும் புழுக்கொடியல், ஒடியல்மா, பாம் போசா, பிஸ்கட், சொக்லேட், கேக, லட்டு, இனிப்புவகை, புழுக்கொடியல் மா உடன் கூல், உடனடி தோசை, வடை, பிட்டு, பேக்கரி உணவு என கிழங்கு மூலமம் பதனீர், கள்ளு, பனம்பாகு, பனை வெல்லம், பனம்கற்கண்டு, பனம்சீனி கழிவுப்பாகு இமதுசாரம், வினாகிரி, வைன்சாராயம், என சாற்று பண்டமாகவும் உணவின் பங்காளியாகின்றது பனை.

உண்ணாப்பொருட்களில்என்றுபார்த்தால் மிருகங்களின் உணவிற்காக, கைப்பணி உற்பத்திகள, பாவனைப் பொருட்கள, வீடு மேய வேலி, அடைக்க அழகுப் பொருட்களுக்கு, அழகு தரு உற்பத்திகளுக்கு, ஈர்க்கு கூடைகள், உறி, சுளகு தும்பு, என ஓலை மூலமும்.

நார்பின்னல, இருக்கை பின்னல, கூடைகள் பெட்டிகள, தட்டுக்கள, கடகங்கள் என நாரின் மூலமும். மரங்கள், மரச்சட்டங்கள், அழகு தரு பொருட்கள், வேர் என மரம் மூலமும். கால்நடை தீவனம், சேதனப் பசளை, கைப்பணிப் பொருட்கள் பொதிகட்டும் மூலப்பொருட்கள், ஈர்க்குவளை, சுளகு, நார் உற்பத்தி, தும்புற்பத்தி மர உற்பத்தி, மடை உற்பத்தி, பாவனை பொருட்கள் விறகு என்றும் உண்ணா பொருட்களாக பனை தரும் செல்வம் நமது அன்றாட வாழ்வியலில் கைகொடுக்கின்றது.

1868ம் ஆண்டு திரு.நசல் என்ற அரச அதிகாரியின் உத்தரவில் வடமராச்சியினை சேர்ந்த ஏழை மக்கள் பனை மரத்தில் இருந்து பதனீர், கள் இறக்கி ஒரு நேர உணவாக பயன்படுத்தி வருவதால் பனைகள் தறிக்கப்பட்டு மரங்கள் ஏற்றுமதி செய்வது தடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவுக்கு அமைய 1877 முதல் பனை தறித்தல் நிறத்தி வைக்கப்பட்டது. 1883ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ம் திகதி 179ம் இலக்கம் இடப்பட்ட கடிதம் சார்பாக பனம்பழத்தின் காய்ப்புதிறன் பனாட்டு உற்பத்தி வெப்ப சூழல் மக்கள் மீள குடியமர்வு போன்ற விடயங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளது. 1927ம் ஆண்டு முதல் பனை தொழில் வல்லுனர்கள் தாமே தமது தொழிலை மேற்கொள்ள கூடிய முறையில் மர வரி முறையினை அறிமுகப்படுத்தினர். கள்ளிறக்கும் மரத்திற்கு மட்டும் வரி செலுத்தி தமது தொழிலை தாமே மேற் கொண்டனர். மரவரி முறை நடைமுறையினால் பல்வேறு சீரழிவு பின்னடைவுகள் ஏற்பட்டாலும் ஆரம்ப நிலையில் இருந்த சமூகக்கட்டமைப்பினை விட ஓரளவு பொருளாதார அபிவிருத்தியினை பனை தொழில் வல்லுனர்கள்சமூகம் பெறக் கூடியதாக இருந்தது. 12500 அங்கத்தவர்களை கொண்ட 30 கள்ளுற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு பெற்றதுடன் 450 பணியாளர்கள் தொகுதியும் அச் சமூகத்தில் இருந்தே தெரிவு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது.

1974ம் ஆண்டில் உலக சந்தையில் ஏற்பட்ட சீனியின் விலையுயர்வு காரணமாக கள்ளுற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்கள் 71 பனை வெள்ள உற்பத்தி நிலையங்களையும் மூன்று பனம் சீனி தொழிற்சாலைகளையும் நிறுவி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தின. ஆயினும் ஆட்சி மாற்றம் காரணமாக சீனி விலை குறைந்தது. நிர்வாக செயற்பாட்டு தொழில் நுட்ப பிரச்சினைகள் காரணமாக 1976 ம் 1977ம் ஆண்டுகளில் நஸ்ரம் ஏற்பட்டது. இன்றும் வெல்ல உற்பத்தி மீள முடியாத நிலை எனபது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்தில் வடிசாலை கூட்டுறவு சமாசம் 1982ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை செயற்பாடுகள் கூட்டுறவு திணைக்களத்தின் கண்கானிப்பின் கீழ் நடைபெறுகின்றன.

என்ன தான் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் பனை வளங்களை பாதுகாப்பதாக அமைந்தாலும் தற்பொழுது பனை உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு 6.75 சதத்திலிருந்து 18.75 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ள வரியும் மக்களின் பனை பண்ட பயன்பாட்டு வீழ்ச்சியும் தமது உற்பத்தியில் தாக்கம் செலுத்தவதாக கூறுகின்றார் மானிப்பாய் பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் தவம் கிருபாகரன்.

கள்ளு அடைத்தல் வினியோகித்தலை தான் நாம் பிரதானமாக செய்ய முடியும். அதற்கடுத்தகடியாக கருப்பனி வெல்லம் இதை விட வேறு பொருட்களை உற்பத்தி செய்ய முடியாதென்று இல்லை. செய்யலாம். ஆனால் உற்பத்தி செலவுக்கேற்ப வருவாய் வரும் பொழுது தான் இதனுடன் மினக்கெடும் கூலியாளர்களின் ஊழியம் மற்றும் இலாபத்தினை ஈடு செய்ய முடியும். உற்பத்தி செலவிலும் வீழிச்சியாக வருவாய் வருமாக இருப்பின் எவ்வாறு இந்த மேலதிக உற்பத்திகளை செய்ய முடியும். பனையின் உண் பண்டங்களை மட்டுமல்ல உண்ணா பண்டங்களையும் நமது மக்கள் அனுகுவதில்லை. எங்கோ இருந்து வரும் வெள்ளைக்காரர் தென்னிலங்கை மக்கள் தான் இதனை கொள்ளவனவு செய்வர். அதுவும் ஒரு குறிப்பிட்ட சீசனுக்கு தான். நமது மக்கள் பனை பொருளில் நீத்து பெட்டியை தவிர மிச்சமெல்லாவற்றையும் கைவிட்டு விட்டனர். அப்போ எப்படி இந்த உற்பத்திகளை அதிகரிக்க முடியும். நாம் செய்யும் வெல்லத்தை விட இறக்குமதியாகும் வெல்லங்களை தான் அதிகம் வாங்குகின்றனர். காரணம் எமது வெல்லம் தரமானது ஆனால் விலை அதிகம். அது உற்பத்தி செலவு அதிகம் என்பதால் தான் விலை அதிகம். ஆனால் நமது வெல்லத்தை யாரும் வாங்க முன்வருவதில்லை.

கையினால் தான் எமது சங்கத்தில் இவ்வளவு நாளும் கருப்பனி மற்றும் வெல்லம் செய்யப்பட்டது. இப்பொழுது இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கும் அதன் மூலம் உற்பத்தியை பாரியளவில் இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு அதிகரித்து பார்க்க திட்டமிட்டுள்ளோம். நோய் நொடி தராத எமது உற்பத்திகளை மக்கள் பாவனைக்குட்படுத்த பழகி கொள்ளும் பொருட்டே நாமும் உட்பத்தியை அதிகப்படுத்தவோ அல்லது வளத்தை சரியான முறையில் பயன்படுத்தவோ முடியும். பனை மூலம் நமது பொருளாதாரத்தை அதிகப்படுத்த முடியும் தொழில் வளங்க முடியும். ஆரோக்கியத்தை மக்களுக்கு கொடுக்க டுமுடியும். ஆனால் இதற்கு மக்களின் பங்களிப்பு எமக்கு அவசியம். ஊர்களில் உள்ள தவறணைகளை எல்லாம் மூட சொல்லும் மக்கள் இறக்குமதி ஆகும் அற்பகோல் அதிகமுள்ள சாராயங்களை வாங்கி பருக மறப்பதில்லை தானே. எமது உற்பத்தி குடிப்பதில் கூட கொளரவப் பிரச்சினை. ஆனால் ஒரு காலத்தில் தாகம் தீர்க்கும் பாகமாக கள்ளின் பயன்பாடு இருந்துள்ளது. அம் மக்களுக்கு ஆரோக்கியத்தையும் கொடுத்;துள்ளது. எனவே எமது உற்பத்திகளின் பனை வள வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பு அவசியம்.

எமது சூழலின் தன்மைக்கேற்ப இயற்கை தரும் பண்டங்கள் தான் எம் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என பலரும் கூறினாலும். எமது உற்பத்திகள் தான் எமது வளர்ச்சியில் பங்குகொடுக்கும் என்பதே உண்மை. எ்மது இயற்கை வளங்களை நாம் கண்டு கொள்ளா விடத்து இன்னொருவரால் உரிமை கோரப் பட்டு எமது வளங்கள் சுரண்டப்பட்டுவிடும் என்பதை மறக்கலாகாது. இயற்கை தந்த கற்பக வளத்தை பாதுகாத்து மேம்படுத்த முன் நோக்கி நகர்வோம்.

அட்டவணை 3 யாழ் மாவட்டத்தில் பனைப் பரம்பல்

| பிரிவுகள் | தொகை | தொழிலிற்குட்படுத்தப்பட்ட விகிதம் |
|---|---|---|
| தீவகம் | | |
| 1. நெடுந்தீவு-வேலணை | 824,100 | 1.05% |
| 2. ஊர்காவற்றுறை | 256,200 | |
| வலிகாமம் வடக்கு | | |
| 3. தெல்லிப்பளை | 705,000 | 1.05% |
| 4. உடுவில் | 102,200 | |
| வலிகாமம் மேற்கு | | |
| 5. சங்கானை | 310,600 | 2.29% |
| 6. சண்டிலிப்பாய் | 239,900 | |
| 7. கோப்பாய் | 180,700 | 4.03% |
| 8. யாழ்ப்பாணம் | 3900 | |
| 9. நல்லூர் | 51,600 | |
| தென்மராட்சி | | |
| 10. சாவகச்சேரி | 321,500 | 1.29% |
| வடமராட்சி | | |
| 11. கரவெட்டி | 246,800 | 0.75% |
| 12. பருத்தித்துறை | 167,500 | 1.38% |
| 13. மருதங்கேணி | 90,000 | |
| மொத்தம் | 3,500,000 | |

அட்டவணை 3 யாழ் மாவட்டத்தில் பனைப் பரம்பல்

| பிரிவுகள் | தொகை | தொழிலிற்குட்படுத்தப்பட்ட விகிதம் |
|---|---|---|
| தீவகம் | | |
| 1. நெடுந்தீவு-வேலணை | 824,100 | 1.05% |
| 2. ஊர்காவற்றுறை | 256,200 | |
| வலிகாமம் வடக்கு | | |
| 3. தெல்லிப்பளை | 705,000 | 1.05% |
| 4. உடுவில் | 102,200 | |
| வலிகாமம் மேற்கு | | |
| 5. சங்கானை | 310,600 | 2.29% |
| 6. சண்டிலிப்பாய் | 239,900 | |
| 7. கோப்பாய் | 180,700 | 4.03% |
| 8. யாழ்ப்பாணம் | 3900 | |
| 9. நல்லூர் | 51,600 | |
| தென்மராட்சி | | |
| 10. சாவகச்சேரி | 321,500 | 1.29% |
| வடமராட்சி | | |
| 11. கரவெட்டி | 246,800 | 0.75% |
| 12. பருத்தித்துறை | 167,500 | 1.38% |
| 13. மருதங்கேணி | 90,000 | |
| மொத்தம் | 3,500,000 | |




# ஒரு பேனாவின் சுயசரிதை



அன்று ஞாயிற்று கிழமை. நான் சற்று நேரம் முந்தியே தனியார் வகுப்பிற்கு சென்றிருந்தேன். எனது இருக்கையில் அமர்ந்து புத்தகத்தை புரட்டி படித்து கொண்டிருந்தேன். அப்பொழுது யாரோ என்னை அழைக்கும் சத்தம் கேட்டது. சுற்றும் முற்றும் திரும்பி பார்த்தேன். ஆ! என்னை அழைத்தது ஒரு பயனற்று வீசப்பட்ட பேனாவா? அது என்னிடம் தன் கதையை கூற ஆரம்பித்தது.

நான் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட அழகிய பேனா. என்னை போன்றே அழகான பல பேனாக்கள் உற்பத்தியாகி பொதி செய்யப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டோம். நானோ ஸ்ரீலங்கா பொதிக்குள் மாட்டி விட்டேன். இங்கு ஒரு கடையில் தான் நான் காற்று படும் படி வெளியே வந்து ஒரு சுவரில் உள்ள கயிற்றில் என் நண்பர்களோடு தொங்க விடப்பட்டேன்.

அங்கு நான் தொங்க ஆரம்பித்த சிறு நேரத்திலே ஒரு சிறுவன் விரைந்து வந்தான். பேனாவேன்றும்என்று கேட்டவன் கண்களில் நான் அழகாக கண்ணை கவர்ந்து விட்டேன் போலும். உடனே எனக்கு அந்த பேனையை தாருங்கள் என்று வாங்கியவன். என் அழகை சுற்றி சுற்றி பார்த்தவன் கடைக்காரரிடம் சொன்ன்லீன் விலை குறைவாக உள்ளது ஆனால் அழகாக உள்ளதே என்று. அப்படியே தன் பெட்டிக்குள் என்னை வைத்து கொண்டு போனான். அன்று அவனின் நண்பர்கள் எல்லாம் என்னை வாங்கி பார்த்து எங்கு வாங்கினாய் இதை போல் வேறு பேனாக்களும் உள்ளதா என கேட்டார்கள்.

அப்பொழுது அவன் சொன்னான் வேறு இருக்கின்றது. ஆனால் இது தான் அழகா இருந்தது. நான் என் அழகை எண்ணி பெருமைப்பட்டேன். ஆனால் மூன்று நாட்களில் என் தராதரம் விளங்கி விட்டது. நான் அழகா இருக்கிறேன் என்பதை சுற்றி சுற்றி பார்த்தவன். நான் சைனா உற்பத்தி என்பதை கவனிக்கவில்லையே. அதனால் என் தரம் மூன்று நாட்களில் உடைந்து விட்டது. ஆனால் அவன் பாவனைக்கு இல்லா விட்டாலும் வெள்ளை உடல் கொண்ட என் அழகு அப்படியே இருந்தது. ஆனால் அந்த பையனோ என் அழகை விரும்பி தானே வாங்கினான் என்பதையே மறந்து என்னை ஊத்தை படும் படி அனாதரவாக வீசி சென்று விட்டான். என்னை கொண்டு எடுத்து போய் கை வேலை ஏதும் செய்து வீட்டில் அழகு படுத்தியாவது இருக்கலாமே என்று கண்ணீர் விட்டது அந்த பேனா. அதன் கதையை கேட்டு மனமுடைந்த நான் அதை எடுத்து என் பெட்டிக்குள் வைத்தது வீட்டில் கொண்டு வந்து அழகான நீளமான பூ ஒன்றை செய்து கொண்டேன். அது வெள்ளை உடல் பேனா என்பதால் கலர் பண்ணி மேலும் அழகூட்டி என் வீட்டு சாடி ஒன்றுக்குள் வைத்தேன். அத்துடன் நான் வாங்கும் பேனாக்களையும் வீசாமல் இப்படி மீண்டும் ஒரு பயன் பெறும் பொருளை உருவாக்கி விடலாம் என்று முடிவு செய்தேன்.



**க.வியேன்ஷி**
தரம்7B
யா.சுதுமலை .சிந்மய பாரதி வித்தியாலயம்

## வானியல் தகவல்களை முன்வைத்த சில விஞ்ஞானிகள்

அரிஸ்டோட்டல் கி.மு 384 தொடக்கம் 322 காலப்பகுதியில் வாழ்ந்தவர். புவி கோல வடிவமானது என்னும் கருத்தை ஆதாரங்களுடன் உறுததிப்படுத்தினார். இதற்காக அவரால் முன்வைக்கப் பட்ட ஆதாரங்கள்

1. சந்திர கிரகணத்தின் பொது சந்திரனில் விழகின்ற புவியின் நிழல்.
2. குறித்த ஒரு உருவை புவியில் எந்தவொரு இடத்தில் இருந்து அவதானிக்கும் போதும் அதன் ஏற்றக்கோணம் மாறுவதில்லை

குளோடியஸ் தொலமி கி.பி 90168 காலப்பகுதியில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த கிரேக்க இனத்தவரான தொலமியே முதன் முதலில் உலகப்படத்தை வரைந்தார். அரிஸ்டோட்டிலால் முன்வைக்கப்பட்ட புவிமைய மாதிரி உருவை மேலும் விளக்கினார் வானியல் தொடர்பாக 47 உடுத்தொகுதிகளை உள்ளடக்கிய அல்மகஸ்ட் எனும் நூலை வெளியிட்டார் றைகோ பிறேஹே அதிக எண்ணிக்கையிலான வானியல் கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்த விஞ் ஞானி ஆவார். வானியல் அவதானிப்பு உபகரணம் ஒன்றை முதன் முதலில் உருவாக்கினார் 700 வரையிலான உடுக்கள் பற்றிய தகவலை முன்வைத்தார்.

**பி.துர்க்கசியா**
யா.வேம்படி மகளீர் கல்லூரி

மாணவச் செல்வங்களே...பேஸ்புக்கில் 'தீபம் மாணவர் பூங்கா' பக்கத்தில் இன்றே இணைந்திடுங்கள். குட்டிக்கதைகளோ, படங்களோ, கடிநொடிகளோ எதுவானாலும் அதில் பதிவிடுங்கள். தரமானவை இந்தப்பக்கத்தில் வெளியாகும். அத்துடன், மாணவர் பூங்காவில் இணைபவர்களின் படங்களும் வெளியாகும்.



## உண்மை கூறி உத்தமனாய் வாழ்

ஓர் அழகிய காட்டில் எறும்புப்புற்று ஒன்றிருந்தது அங்கு ராணி எறும்பு வேலைக்கார எறும்பு என இருவகையான எறும்புகள் இருந்தன. அங்குள்ள வேலைக்கார எறும்புகளுக்கு உணவு சேகரிப்பதும் பெரிய பறவைகளிடமிருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வதும் தான் வேலையாக இருந்தது. ராணி எறும்பானது வேறு பிராணிகளினால் ஆபத்து வரும் போது அதை வேலைக்கார எறும்புகளுக்கு அறிவிக்கும் இவ்வாறு இருக்கும் போது ஒரு நாள் ஒரு வேலைக்கார எறும்பு காலுடைந்து விட்டதாக பெய் கூறி புற்றிலே இருந்தது.

அனைத்து எறும்புகளும் வேலைக்கு சென்ற பின் அந்த எறும்பு தனக்கு உதவியாக நின்ற எறும்புடன் தனியாக சென்று உணவு தேட நினைத்தது. அந்த நேரம் ராணி எறும்பானது ஒரு காக்கை வருவதாக அறிவித்தல் விடுத்தது. உடனே வேலைக்கார எறும்புகள் காக்கையை தாக்க ஏற்பாடு செய்தன. அந்த நேரம் பொய் கூறிய எறும்பு தன்னுடன் இருந்த எறும்பையும் அழைத்துக்கொண்டு உணவு தேடிச் சென்ற போது ஒரு உருளைக்கிழங்கை கண்டன. அதை எடுத்து வருவதற்கு முயற்சித்த போது அதன் கால் கிழங்கில் மாட்டிக் கொண்டது. உடனே அந்த எறும்பு சத்தமிட ஆரம்பித்தது. அதன் சத்தத்தை கேட்ட ஏனைய எறும்புகள் காக்கையினால் ஆபத்து என நினைத்து ஓடி வந்து பார்த்தன.

கிழங்கில்மாட்டிக்கொண்டதால்உண்மையிலே அதன்கால்உடைந் திருந்தது. அதைக்கண்ட ராணி எறும்பு பொய் கூறிய உனக்கு உண்மையிலேயே கால் உடைந்து விட்டது பார். இனி மேலாவது உண்மை கூறப் பழகு என்று கூறி அந்த எறும்பை காப்பாற்றி விட்டது.

**இ.சாகிர்தியா**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | | | | 5 |
| | | | | 3 | | | | |
| | | 9 | | | 8 | | | |
| | | | | | | | | |
| 9 | | | | | 1 | | | |
| | 4 | | 3 | | | | | |
| 8 | | | | | 9 | 3 | | |
| | | 6 | | | | | 9 | |
| | | | | | 3 | | | |

1986ம் ஆண்டு ஜப்பானிய நிறுவனமான நிகோலி அறிமுகப்படுத்திய சுடோக் எண் விளையாட்டு 2005ம் ஆண்டில் உலகில் பரவாலாக்கப்படடதுடன் இன்று மாணவர்கள் விரும்பி விளையாடும் முளையை பரிசீலிக்கும் விளையாட்டு கூட. இதில் ஒவ்வொரு சதுர பெட்டிகள் 3× 3= 9 கட்டங்களை கொண்டவை. இதில் வலமிருந்து இடம் மேலிருந்து கீழ் ஒரு எண் மீண்டும் வராமலும். ஒரு பெரிய சதுர கட்டத்துக்குள் 19 இலக்கமும் வர வேண்டும். இது ஒரு தர்க்க ரீதியான விளையாட்டு. இதற்கான விடை மற்றும் இதனை சரியாக நிரப்பி அனுப்புபவர்களின் பெயர் விபரம் அடுத்த வாரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

### கண்டுபிடித்தார்கள்

பென்சிலின் மருந்து - ஃபிளெமிங்
இடி தாங்கி - பெஞ்சமின் பிராங்கிளிங்
துவிச்சக்கர வண்டி - பாட்ரிக் மாக்மில்லன்
தீப்பெட்டி - ஜான் வாக்கர்
சூரிய மண்டல செயன் முறை - கோபர் நிக்ஸ்
ஸ்டெதஸ்கோப் - லெய்னக்
பாரமானி - தொரிசெல்லி
கெலிகப்ரர் - புறொக்கெட்
நீராவி புகை வண்டி - ஜேம்ஸ்வாற்
தொலைக்காட்சி - சுவாரிகிங்





# வடபகுதி வலசைப் பறவைகளின் வாழிடங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

பறத்தலின் இரகசியம் 10

கணபதிப்பிள்ளை அசோகன்
asokan 2301@gmail.com

வலசைப் பறவைகளுக்கு ஒரு வருடத்திற்கு இரண்டு வாழிடங்கள் உண்டு. ஒன்று வடமுனைவுக்குக் கிட்டிய இனப்பெருக்க வாழிடங்கள், அவற்றின் இரண்டாவது வீடு குளிர்காலத்தில் அவை உணவுக்காக வரும் இலங்கை போன்ற நாடுகள் இலங்கையின் வட பகுதியில் மிகச் செறிவாகக் காணப்படும் கடல் நீரேரிகளில் இந்தப் பறவைகளுக்கு தேவையான தேவை யான பல நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்றன.

**குளிர்கால உணவு தேடும் வாழிடங்களின் பண்புகள்.**

எந்த ஒரு அங்கியும் தமக்குரிய வாழிடத்தை தேர்ந்தெடுக்கும் போது பல அம்சங்களை கருத்தில் கொள்ளும். வாழிடம் அங்கியைத் தெரிந்தெடுக்கின்றதா?, அல்லது அங்கி வாழிடத்தை தெரிந்து எடுக்கின்றதா?, என்பது சுவாரஸ்யமான ஒரு கேள்வியாகும். உண்மையில் இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. இயற்கைத் தேர்வு என்ற எண்ணக்கருவும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

அங்கிகள் தமது வாழிடங்களில் தமக்குத் தேவையான உணவு, பாதுகாப்பு, மற்றும் இனப்பெருக்கத்துணை கிடைக்கும் தன்மை ஆகியவற்றைப் பெற்றுக் கொள்கின்றன. வடபகுதிக்கு வந்து போகும் பறவை இனங்களில் உணவு, பாதுகாப்பு என்பன தேவை. என்பது உங்களுக்குத் தெரியும். இங்கு அவை கூடுகட்டி இனம்பெருக்குவது இல்லை. எனவே வாழ்க்கைத் துணை என்ற விடயம் இங்கு கதைக்கப்பட வேண்டிய ஒரு அம்சமாக பார்க்கப்படத் தேவையில்லை.

**இலங்கையின் வடபகுதி வாழிடங்களும் வலசைப் பறவைகளும்**

வடபகுதி வலசைப் பறவைகள் குறிப்பாக உல்லாசப் பிரயாணத்துறை போன்ற பொருளாதார முக்கியத்துவம் உள்ள பறவைகள் அனேகமாக கடல் நீரேரிகள் மற்றும் கடல் ஓரங்களில் உள்ள ஏனைய ஈரநிலங்களிலே காணப்படுகின்றன. கடல் நீரேரிகளில் மிக அதிகளவில் காணப்படும் நத்தை, மட்டி, சிப்பி, ஆகியன அவற்றிற்கான பிரதான உணவை வழற்குகின்ன்றன.

இந்த சிற்பிகளும் மட்டிகளும் கடல் நீரேரிகளில் காணப்படும் பௌதீக, இராசயன மற்றும் உயிரியல் காரணிகளால் மிகவும் சிறப்பாக தமது வாழ்க்கை வட்டத்தை பூர்த்தி செய்கின்றன. (இயற்கையாக )அதிக வரட்சி வந்தாலென்ன, (இயற்கையாக) அதீத வெள்ளப் பெருக்கு வந்தாலென்ன அவை முற்றாக அழிவதில்லை. அவை கோடை நெடுந் தூக்கம் உட்பட பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றன.

இந்த மட்டிகள், சிற்பிகளின் வாழ்கசை வட்டத்திற்கும் அவற்றை உணவாக உட்கொள்கின்ற வலசைப் பறவைகளுக்கும் பல மில்லியன் ஆண்டுகளாக எந்த வித குழப்பமும் இல்லாமல் தொடர்புகள் போணப்படுகின்றது. ஆனால் உறவானது 1950 களின் பிற்பகுதிகளில் ஏற்பட்ட அபிவிருத்தி என்ற செயற்பாடுகளினால் அது குழப்பமடைய ஆரம்பித்தது.

பிரதானமாக கடல் நீரேரிகளில் மனிதனின் தலையீட்டினால் இந்த சமநிலை மெல்ல மெல்ல குழம்பத் தொடங்கியது. அதாவது வட மாகாணத்தின் மிக முக்கியமான இயற்கைச் சொத்தாகக் கருதப்படும் (ஆனால் இன்னும் பலரால் உணரப்படாத )வலசைப் பறவைகளும், அவற்றின் பிரதாக வாழிடமாகக் கருதப்படும் கடல் நீரேரிகளும் பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்கத் தொடங்கியது.

**கடல் நீரேரிகள் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்.**

கடல் நீரேரிகளில் வரண்ட காலங்களில் (நிலம் போல இருக்கும் போது) அத்துமீறிக் குடியேறி கட்டிடங்கள் கட்டுவது மிகப் பெரிய பிரச்சினை அதே வேளை பெரு மழை( நிசாப்புயல் போன்றவை) ஏற்படும் போது அந்த வதிவிடவாளர்களுக்கான நிவாரணம் என்பது ஒரு சமூகப் பிரச்சினையாக மாறும்

இது சிறிதுகாலம் அங்கு இருந்தவர்களின் சமூகப் பிரச்சனைகள் என்பதையும் தாண்டி மில்லியன் கணக்கான ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக, வந்த இடத்திற்கே (site tendancy) திரும்பி வரும். பறவை இனங்கள் அழிந்து போவதற்குக் கூட காரணமாக அமையலாம்.

அடுத்த பிரச்சினை கடல் நீரேரிகளில் கொட்டபடபடும் கழிவு ஆகும். கேட்பார் ஒருவரும் இல்லை என்ற எண்ணத்தில் (ஏனெனில் கடல் நீரேரி நிலங்கள் தனியாருக்குச் சொந்தமானவை அல்ல) அங்கு தனியாரும், அரச நிறுவனங்களும் குப்பை கொட்டுகின்றன. அவை தனியார் காணியாக இல்லாதிருப்பதால் “என்னுடைய காணி ஏன் குப்பை கொட்டுகிறாய் எனக் கேட்பதற்கு “ அங்கு ஒருவரும் இல்லை அதியுயர் சோகம் என்னவெனில் சில கடல் நீரேரி விளிம்புக் கிராமங்களில் உள்ள சில வீடுகளைக் கடந்து வாகனங்கள் குப்பை கொட்டித் திரும்புகின்றன. ஆனால் “என் வீட்டில் கொட்டவில்லைத் தானே எனக்கேன் வீண் வம்பு” என்று வாழாய் இருந்து விடுகின்றார்கள். இதன் காரணமாகத் தான் சமூகமட்டத்திலாக சுற்றுச் சூழல் பாதுகாப்புப் (community base environment conservation) பற்றி சுற்றுச் சூழல் ஆய்வாளர்களும், அறிஞர்களும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்கள்.


அடுத்த முக்கிய பிரச்சினை கடல் நீரேரிகளின் அயலில் உள்ள விவசாய நிலங்கள் பலவற்றில் அதீத களைநாசினி, கிருமிநாசினி,பூச்சிநாசினி,இரசாயன உரங்கள் ஆகியன எந்தவித விதிமுறைகளையும் பின்பற்றாமல் கட்டுப்பாடுகளும் இன்றி பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கடல் நீரேரிகளின் தூய்மையும் அங்கு பறவைகள் உட்பட காணப்படும் ஏனைய உயிரினங்களுக்கும் தேவையான சாதகமான சூழ்நிலைகள் பாதிப்படைகின்றன. வாழிடங்களைப் பாதிக்கும் இன்னொரு காரணி மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் நடைபெறும் செயற்பாடுகள்

கடல் நிரேரிகளின் ஊடான பெரும் பாதைகள் மற்றும் அங்கு நிர்மாணிக்கப்படும் பாரிய கட்டிடங்கள் ஆகியன ஆகும். சில வேளைகளில் சுற்றுச் சூழல் முற்காப்பு மற்றும் நின்று நிலைக்கும் அபிவிருத்தி நுட்பங்களைப் பயன்படுத்தாதனால் கடல் நீரோட்டம் உட்பட பல்வேறு

பண்புகள் பாதிக்கப்படுவதனால் அங்கு பறவைகள் உட்பட ஏனைய உயிரினங்களின் உணவு மற்றும் நாளாந்த செயற்பாடுகள் பாதிப்படைகின்றன. அண்மையில் கி 32 இல் கட்டப்பட்ட பூநகரிப் பாலம் மிகச் சிறப்பாக கட்டப்பட்டதனால் அது கடல் நீரேரியின் நீரோட்டத்தை குழப்பாமல் இருப்பதனை சுற்றுச்சூழல் அறிஞர்களும், ஆய்வாளர்களும் மெச்சுகின்றனர் இவ்வாறான சுற்றுச்சூழல் நேச செயற்பாடுகளின. அடிப்படையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுமாயின் இயற்கையை நேசிக்கின்றவன் என்ற பெயரை மனிதன் பெறலாம். மேற்கூறியவை வலசைப் பறவைகளின் பிரதான வாழிடங்களான கடல்நீரேரிகளை எதிர் நோக்கியுள்ள ஆபத்தைப் பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பேயாகும்.

நம்பிக்கை கடல் நீரேரிகள் மற்றும் வலசைப் பறவைகள் பற்றிய ஆய்வுகள்.






தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும், சுயாதீன ஆய்வுகளும், வலசைப் பறவைகளைப் பற்றியும், அவற்றின் வாழிடங்கள் பற்றியும், அவை எதிர் நோக்கும் பிரச்சினை பற்றியும் தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த ஆய்வுகள் வலசைப் பறவைகளைப் பற்றியும் , அவற்றின் வாழிடங்கள் பற்றியும், அவை எதிர் நோக்கும் பிரச்சினை பற்றியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல விஞ் ஞான உண்மைகளை வெளிக் கொண்டு வரும் என நம்பப்படுகின்றது. அதே வேளை பாடசாலை மாணவர்களும் பொது மக்களும், மற்றும் பொது நிறுவனங்களும் தமது சக்திக்கும் வளங்கள்களுக்கும் இசைவாக நான் ஆரம்பத்திலிருந்தே கூறி வரும் “பொது மக்கள் சார் விஞ்ஞானம்” (citizen science) என்ற அடிப்படையில் தமது பங்களிப்பை வழங்கலாம்.

இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக எமது கடல் நீரேரிகளும் தூய்மை கெடாமல் நிலைக்கும் , வலசைப் பறவைகளும் ஏனைய அங்கிகளும் மகிழ்ச்சியாக வாழும். இதனூடாக மனிதனும் நின்று நிலைக்கும் அபிவிருத்தியின் ஊடாக சிறப்பான வாழ்க்கையை வாழலாம்.

(அடுத்த வாரமும் வலசைப் பறவைகள் பறக்கும்)










இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 28.02.2016 அன்று வெளியிடப்பட்டது